990.

[illegible] 1957

10.2.57

JL
V211m,N41D
N57.15-32.
147544


986


# திராவிடநாடு

10—2—57 | வார வெளியீடு | விலை 2 அணா


OFFICE OF THE REGISTRAR ... 28 FEB 1957 MADRAS

986
1-57



[library stamp]

16-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு சின்ன சட்டம் போட்டால் தீரும். பிறகு அல்லல் எப்படி வரும்.

மலேரியாவுக்கு ஒரே ஒரு கொய்னா மாத்திரை சாப்பிடுவதைப்போல், காலராவுக்கு ஒரே ஒரு ஊசி போட்டுக்கொள்வதைப்போல், நெசவாளியினுடைய அல்லல் தீருவதற்கு இந்த மாமருந்து தவிர வேறு மருந்திருந்தால் காட்டுங்கள். வேறு யாராவது சித்த வைத்தியர் சூரணம் தந்தால் தயவு செய்து அந்தப்பொட்டலத்தைப் பிரித்துக் காட்டுங்கள். இராசகோபாலாச்சாரியாரே இதைத்தானே சொன்னார், முதல் மந்திரியாக இருந்த நேரத்தில்? வடநாட்டு ஆலை முதலாளிகளைக் கேட்டுக்கொண்டார், டெல்லி சர்க்காரைக் கேட்டுக் கொண்டார்; "எங்களுடைய நாட்டில் தயாரிக்கப்படுகின்ற கைத்தறி ரகங்களுக்குப் போட்டியாக வடநாட்டிலிருந்து துணிகள் வராமல் தடுத்துவிடுங்கள்" என்று கேட்டார். இப்பொழுது இருக்கிறாரே நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரி, இவர்தான் அப்போது அங்கே தொழில் அமைச்சராக இருந்தார். அவர் சொன்னார், "என்ன பைத்தியக்காரத்தனமான கோரிக்கை? எப்படி என்னாலே ஆலைகளைத் தடுக்க முடியும்?" என்றார், அவ்வளவுதான், வெளிப்படையாகச் சொன்னார். உள்ளூர அவருடைய மனது என்ன சொல்லிக்கொண்டிருந்ததென்றால், "இது என்ன என்னை இந்தக் காரியத்தைச் செய்யச் சொல்லுகின்றார்களே, ஆலை முதலாளிகளைத் தடுத்துவிட்டால், டாட்டா என்னைத் தண்டிப்பாரே, பிர்லா என்னிடத்திலே பேசமாட்டாரே. பஜாஜ் எனக்கு விருந்தளிக்க மாட்டாரே", என்று அவர் மனதிற்குள்ளே எண்ணிக்கொண்டு வடநாட்டு ஜவுளிகள் இங்கே இறங்குவதற்கு வழி செய்து வைத்தார்.

இப்போது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை நீங்கள் சட்டசபைக்கு அனுப்பிவைத்தால் அங்கே உட்கார்ந்துகொண்டு தட்டிக் கேட்க முடியும்.

எங்களாலேஎன்னசெய்யமுடியும் என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டதாக நான் கேள்விப்பட்டேன். அந்தச் சந்தேகம் அவர்களுக்கு வந்ததைப்பற்றி எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் என்றால் எங்களாலே என்ன செய்ய முடியும் என்பது இப்போதே அவர்களுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

எங்களாலே அவர்களை எதிர்க்க முடிகிறது. பொப்பிலியால் எதிர்க்கமுடியவில்லை, ஓடிப்போய்விட்டார். பித்தாபுரத்தால் எதிர்க்க முடியவில்லை ஓய்ந்துவிட்டார். விஜயநகரத்தால் எதிர்க்க முடியவில்லை உட்கார்ந்துவிட்டார், வெங்கடகிரியால் எதிர்க்க முடியவில்லை உட்கார்ந்துகொண்டார். இராமநாதபுரத்தால்எதிர்க்க முடியவில்லை, சரண்புகுந்துவிட்டார். ராஜாசர் குடும்பத்தாரால் எதிர்க்க முடியவில்லை, இரவல் டிக்கட் வாங்கிக்கொண்டார்கள். ஆனால் இந்த அன்னக்காவடிகள் இன்றைய தினம் உங்களை எதிர்க்கிறார்கள். அதிலே இருந்துபுரிந்துகொள்ளுங்கள், என்ன செய்ய முடியும் என்று! என்னசெய்ய முடியும் என்று கேட்டால், உள்ளே அனுப்பினால், ஆண்டவன் அருளாலும், உங்கள் ஆசிர்வாதத்தாலும், அவர்கள் எண்ணம் நிறைவேறாமல், நீங்கள் என்னை உள்ளே அனுப்புகின்றீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நாங்கள் தட்டிக் கேட்ட பிறகுதான் டெல்லி தர்பாருக்கே ஒரு புது பாஷை தெரியும். இதுவரையிலே டெல்லி தர்பாருக்குத் தெரிகின்ற பாஷை எல்லாம், உங்களுடைய உண்மையுள்ள ஊழியன் என்பதுதான். நாங்கள் போனால்தான் டெல்லி தர்பாருக்குத் தெரியும், உன்னுடைய உண்மையுள்ள ஊழியர்களல்ல நாங்கள், உங்களுடைய மதிப்புக்குரிய தோழர்கள் என்று சொல்லுவோம். உங்களுக்கு எஜமானர்கள் என்ற மமதையோடு பேசமாட்டோம். உங்களுடைய மதிப்புக்குரிய தோழர்கள் என்று சொல்லுவோம். ஆண்டவனையே தோழன் என்றல்லவா நாயன்மார்கள் அழைத்தார்கள்! அதைவிடவா இங்கேஇருக்கிறகாங்கிரஸ்காரர்களுக்கு நேருவிடத்திலே பக்தி இருக்கவேண்டும்? ஆகையினாலே டெல்லி தர்பாரைத் தட்டிக் கேட்பதற்கு ஏற்ற உள்ளத் திடமும் தத்துவத்திடமும் கொள்கை உறுதியும் படைத்தவர்களை நீங்கள் அங்கே அனுப்பினால்தான் நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள், நமக்குக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகைகள் நமக்குக் கிடைக்கும்.

அப்படியானால் என்ன பங்கு என்று நீங்கள் கேட்கலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6000 கோடி ரூபாய் செலவு செய்யப்போவதாக, டெல்லியிலே உள்ளவர்கள் அறிவிக்கின்றார்கள். உங்களுக்கும் எனக்கும் 6000 கோடி என்று சொன்னவுடனே ஏதோ சொல்தான் புரிகின்றதே தவிர, அதனுடைய விவரம் புரியாது. நான்—எனக்கு ஏறக்குறைய 46 வயது ஆகிறது. நான் மொத்தமாக ஒரு இலட்ச ரூபாயைப் பார்த்ததில்லை. தங்கவேலரவர்கள் பார்த்திருக்கக்கூடும் என்று நினைக்கின்றேன். அவர் பார்த்தாரோ இல்லையோ, நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் பார்த்தார், இலட்ச ரூபாயை. அவருடைய வீட்டுப் பணமல்ல — நம்முடைய மாநில மாநாட்டு வசூல் பணத்தைப் போட்டு ஒரு நாள் எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார், 'இலட்ச ரூபாய் என்றால் இப்படித்தான் இருக்கும் என்று, இந்தப் பாழாய்ப்போன கண்களுக்கு அந்தப் பாக்கியம் கூடக் கிடைக்கவில்லை. நான் அதைக் கூடப் பார்க்கவில்லை. நான் வேறு வேலையில் ஈடுபட்டிருந்தேன். இப்படி இலட்சங்கள் சேர்ந்தால் ஒரு கோடி. கோடிக்கு நம்முடைய நாட்டிலே என்ன மதிப்பு வைத்திருக்கின்றார்கள் என்றால்; யாரிடத்திலாவது இலட்ச ரூபாய் இருந்தால் அவனை ராஜா ஆக்கிவிடுவார்கள், அவனை இலட்சாதிபதி என்பார்கள். கோடி ரூபாய் இருந்தால் ராஜாகூட' அல்ல, ஈஸ்வரனே ஆக்குவார்கள், 'அவருக்கென்ன கோடீஸ்வரன்' என்பார்கள். அப்படி இருக்கிற ஈஸ்வரன் 6000 ஈஸ்வரன் வரப்போகிறான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்.

> கே: ஐந்து ஆண்டுத் திட்டம் எந்த மட்டில் நிறைவேறியிருக்கிறது?
>
> ப: அச்சிட்டு விநியோகமாயிருக்கிறது.
>
> "பிலிம் இந்தியா"

147544

J!



நீங்கள் எங்களை அனுப்பினால் தான்—நாங்கள் ஆஸ்திகர்களோ நாஸ்திகர்களோ அது ஒரு பக்கத்திலே இருக்கட்டும்—இங்கே நடமாட இருக்கிற 6000 ஈஸ்வரன்களில் ஒரு 500, 600 ஈஸ்வரனையாவது இங்கே அழைத்துக் கொண்டுவரமுடியும். 'ஐயா, எங்கள் ஊரில் ஏகப்பட்ட கோயில்கள் இருக்கின்றன. ஏகாம்பரர்கோயில் கைலாசநாதர் கோயில் என்று ஒவ்வொரு ஈஸ்வரனை உள்ளே அழைத்துக்கொண்டு வரமுடியும்.

காங்கிரஸ்காரர்களை அனுப்பினால் 6000 கோடிரூபாயும்அங்கேதான் செலவாகும்.

யாரோ ஒரு நண்பர் சொன்னாராம், இங்கே பேசுகின்ற சமயத்தில், "அண்ணாத்துரை என்ன எல்லாம் வடநாட்டில் வடநாட்டில் என்கிறார், தென்னாட்டிலே ஒன்றுமா இல்லை. மணிமுத்தாறு திட்டமில்லையா? பவானி சாகர் இல்லையா?" என்றெல்லாம் சொன்னாராம்.

இந்தப் பவானிசாகர் என்று அவர்கள் சொல்லுகின்றபோது, நீட்டி முழக்கிப் பேசுகின்றார்கள் ப...வா...னி...சா...க...ர்...என்று. ஆனால் அந்த பவானிசாகருக்குச் செலவழித்த பணம் என்ன? பக்ராநங்கலுக்குச் செலவழிக்கப்பட்ட பணம் என்ன? கணக்கைக்கொடுக்கச் சொல்லுங்கள்.

ஒரு கொடுமைக்கார மாமியார் சொன்னாளாம், என்னுடைய மகள் இருக்கிறாளே அவள் வெ...ள்...ளி...க்...கி...ழ...மை....க்...கு...... வெ...ள்...ளி...க்...கி...ழ...மை... தலை முழுகுவாள். எங்கள் மருமகள் இருக்கிறாளே அவள் தீபாவளிக்குத் தீபாவளி தவறாமல் தலைமுழுகுவாள் என்று சொல்வதைப்போல், பக்ராநங்கல், என்று ஒரு பக்கத்திலே தள்ளிவிட்டு, ப...வா...னி...சா...க...ர் என்று பக்தவத்சலம் இழுத்தால், புள்ளிவிவரம் தெரியாமலாபோய் விடும் உங்களுக்கு? காட்டச்சொல்லுங்கள் பக்ராநங்கலுக்குச் செலவான பணம் எவ்வளவு என்றும், பவானி சாகருக்குச் செலவான பணம் எவ்வளவு என்றும்.

இன்றைய தினம்வரை தமிழ் நாட்டிலே உள்ள அணைக்கட்டுகளில் பெரிய அணைக்கட்டு மேட்டூர். பெரிய பலன் தருகிற அணைக்கட்டு மேட்டூர். அது வெள்ளைக்காரன் கட்டிக்கொடுத்தது.

இவர்கள் கட்டியதல்ல. இவர்கள் கட்டியது இரண்டு அணைக்கட்டுகள், ஒன்று பவானிசாகர், மற்றொன்று மணிமுத்தாறு. மணிமுத்தாறுக்கு ஊராரிடத்திலே மடிப்பிச்சை வாங்கிக் கட்டினார்கள். சர்க்கார் பணத்திலேயே கூட நடந்துவிடவில்லை. இங்கே செலவழிக்கின்ற பணம் எல்லாம் பத்திரிகையில் எழுதுவார்கள் 156-லட்சம். ஏன் ஒருகோடி, ஒன்றரை கோடி என்று எழுதினால் இவ்வளவுதானா என்பீர்கள். ஆகையினால் 156-லட்டம். எனக்குச் சில ஊர்களில் பணமுடிப்புத் தருகிறார்கள் அல்லவா? 501-காலணா! 501-காலணாவை ரூபாய் ஆக்கிச்சொன்னால் கொஞ்சமாக இருக்கும். அவர்களுக்குஎன்னிடத்தில்இருக்கிற ஆசையும், அவர்களுக்கு இருக்கிற இயலாமையும், சேர்ந்து காலணாவாக மாற்றி 501-காலணா என்று சொல்லுவதைப்போல்—

இவர்கள் 156-லட்சம் என்கிறார்கள், பக்ராநங்கலுக்கு என்ன என்று கேளுங்கள். 120-கோடி, 90-கோடி, 80-கோடி 60-கோடி என்று இப்படி இருக்கிறது. அதனாலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்டிருக்கின்ற விளம்பரத்தாளிலே போட்டிருக்கிறது.

**ஆலைகள் ஆயிரம் வடக்கே**

**ஆடைகள் விற்பனை தெற்கே**

என்று.

இந்த அடுக்குமொழி பேசினால் போதுமா, என்று அழகேசன் கேட்கிறார். முடிந்தால் நீயும் பேசு. இல்லையானால், அதிலே பொருள் இல்லையானால் எனக்கு எடுத்துக் காட்டு.

ஆலைகள் ஆயிரம் இருக்கிறதா இல்லையா? இங்கே ஆடைகள் விற்பனை ஆகிறதா இல்லையா? அமதாபாத் சேலைகள் இங்கே விற்கப்படுகின்றன. கான்பூர் வேட்டிகள் விற்கப்படுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகம், அவற்றைத் தடுத்தால்தான் தமிழ்நாட்டு நெசவாளிக்கு வாழ்வு இருக்கும் என்று கூறுகிறது. தமிழ்நாட்டு நெசவாளிக்கு வாழ்வு கிடைத்தால்தான், தமிழ்நாட்டுக்கு வாழ்வு இருக்கிறது. ஏன் என்றால் தமிழ்நாட்டில் இன்றைய தினம் இருக்கின்ற தொழில் இரண்டுதான். நாம் ஒன்றும் ஆலைகள் வைத்திருக்கவில்லை, இரயில்கள் கட்டவில்லை. காகித தொழிற்சாலை இல்லை. கப்பல் கட்டுகின்ற தொழில் இல்லை. இரும்புத் தொழிற்சாலை இல்லை. உருக்குத் தொழிற்சாலை இல்லை. எந்தத்தொழிற்சாலையும் நம்மிடத்திலே இல்லை. நம்மிடத்திலே இருப்பதெல்லாம் ஒரே ஒரு தொழிற்சாலை. பெரம்பூரிலே இருக்கிற கோச்பாக்டரி—இரயில்வே பெட்டி கட்டுவது, அந்தப் பெட்டியை இங்கே கட்டுவார்கள். இரயில்வே இன்ஜினை வடக்கே செய்கிறார்கள். அந்தச் சித்தரஞ்சன் இழுக்கின்ற இழுப்புக்குத்தான் பெரம்பூர் பெட்டி போகவேண்டும். எப்படி டெல்லி சர்க்கார் இழுக்கின்ற இழுப்புக்குச் சென்னை சர்க்கார் போகவேண்டுமோ, அதைப்போல் சித்தரஞ்சன் இன்ஜின் இழுக்கின்ற போக்கில்தான் பெரம்பூர் பெட்டி போகவேண்டும்.

இந்த ஒரு தொழில் தவிர நம்மிடத்திலே இன்றைய தினம் இருக்கிற இரண்டுஉயிர்த்தொழில் ஒன்று விவசாயம், மற்றொன்று நெசவு.

ஆனால் வடநாட்டில் எல்லாத் தொழிலும் இருக்கிறது.

வடநாட்டிலே இருக்கிற விவசாயியின் வருட வருமானம் சராசரி 600 ரூபாய். தென்னாட்டு விவசாயின் சராசரி வருமானம் 300 ரூபாய். இந்தப் பேதம் போக வேண்டுமானால், **திராவிடநாடு திராவிடருக்கே** ஆகவேண்டும்.

✱

> கேள்வி:—முட்டாள், அயோக்யன் இருவரில் யார் தேவலை?
>
> பதில்:—அயோக்கியன்தான். அவனைப் பிடித்துத் தண்டிக்கலாம். முட்டாளைப் பிடிக்கலாமே யொழியத் தண்டிக்க முடியாது. தண்டனை செய்வதானால் அதை உணர்ந்து கொள்வதற்கும் அறிவு வேண்டும்.

# அந்த அச்சம்

மலர் 15] ஆண்டு சந்தா ரூ. 7 [10—2—57] தனிப் பிரதி 2 அணா [இதழ் 32

"வானமே விழுந்தாலும் திராவிட நாட்டைத் தரப்போவதில்லை" என்று கர்ச்சித்தாராம் நேரு பண்டிதர் சென்னையில்! இந்த மாவீரர் எழுப்பிய கர்ச்சனைகள் ஆயிரமாயிரம்! அவைகளில் எத்தனை காற்றோடு போயின என்பதும் நாடு அறியும்! பாகிஸ்தான்—பம்பாய்—மொழிவாரி மாகாணம், இதில் எதைத்தான் இவர் எதிர்க்காமலிருந்தார்? எதற்குத்தான் கடைசியில் பணியாமலிருந்தார்? கள்ளமார்க்கெட்டுக்காரர்களைக் கழுவிலேற்றப்போகிறேன் என்று கர்ச்சித்தாரே, என்ன ஆயிற்று? கழுவில், உண்மைத் தியாகிகளின் கனவுகளும் உத்தமர் காந்தியடிகள் சொன்ன மொழிகளும்தான், ஏற்றப்பட்டனவே ஒழிய, அந்தக் கனவான்கள், இதோ இவருக்குக் கைலாகு தரும் காட்சியைக் காண்கிறோம் அனுதினமும்!

ஆகவே இவருடைய கர்ச்சனைகள் மட்டுமல்ல, இப்படி ஆவேசத்துடன் மாற்றாரின் கோரிக்கைகளை மறுக்கும் எந்த மமதையாளனின் எண்ணங்களும் நீண்ட நாட்கள் நிலைத்ததில்லை என்பதை அறிவோம் நாம்.

நம்மைப்பற்றிப் பேசுவதற்காகவே அவருடைய ஆட்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சென்னைக்கூட்டத்தில் நேரு, 'திராவிட....' என்று ஆரம்பித்ததும், எங்கே மறந்து விடப்போகிறாரோ பெயரைச் சொல்ல என்னும் அச்சமும் பரபரப்பும் கலந்த நிலையில் காமராஜர், பின்னாலிருந்தபடிசொன்னாராம், "முன்னேற்றக் கழகம்! முன்னேற்றக் கழகம்!!" என்று. இந்த இடமே, நமது எண்ணத்தைக் கவர்ந்தது. முன்னேற்றக் கழகத்தைப்பற்றிக் கவனமூட்டி, அதைப்பற்றிப் பேசுமாறு நேருவுக்கு நினைவுவரச் செய்வதிலே காமராஜருக்கு ஆசை.

"யார் இருக்கிறார்கள் என்னை எதிர்க்க? வலைவீசி வீழ்த்திவிடும் எமது காங்கிரஸ்! பணமோகினி இருக்கிறாள் —பதவி மது இருக்கிறது வாரி வழங்க. இரண்டுக்கும் மயங்கிடாதோர் இருக்க முடியுமோ, இங்கே?" என்று காமராஜர், கட்டிய மனக்கோட்டைகள் பல. அதனைத் தூள் தூளாக்கி, அவருடைய மனதிலே அச்சத்தையும் காங்கிரஸ் பதவி வேட்டைக்காரர்களின் உள்ளத்திலே ஒரு பரபரப்பையும் உண்டு பண்ணியிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்! இந்தப் பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்கு அடுத்தபடியாக, குமரிமுனையிலிருந்து சென்னைமாநகரம் வரையில் பல இடங்களிலும் போட்டியிடுகிற அளவுக்கு உருவாகியிருக்கிறது.

தேசிய ஏடுகளே, இந்த உண்மையினை எடுத்துக் கூறுகின்றன. இது, சாமான்யமானதா! செல்லுமிடமெல்லாம் காமராஜர் காண்கிறார் திராவிட முன்னேற்றக் கழகங்களை! தன்னைச் சுற்றியிருப்போரிலேயே, இவர் தி. மு. க.வோ? அவர் அப்படியிருக்குமோ! என்று அஞ்சக்கூடிய நிலையிலே இருக்கிறார்! மாற்றாரை இழுத்துப் போட்டு அதன் மூலம் காங்கிரஸ் கோட்டையைக் கட்ட எண்ணியவர்கள், கண்முன்னே அது சரிகிறது! "கம்யூனிஸ்டுகளா? புல்கானினையும், குருஷேவையும் இழுத்து வந்து, நேருவுடன் கைகுலுக்கச் செய்து, அவர்களை அன்பெனும் சாகசத்தால் வளைத்துவிடலாம். ஆனால், இவர்களை......? "எதுவும் செய்யமுடியவில்லையே! எதிர்க்கிறார்களே, அக்கிரமங்களை! எடுத்துச் சொல்கிறார்களே, நாட்டின் நிலைமைகளை!!", என்று ஏங்க வேண்டிய நிலை பிறந்து, அதன் காரணமாக உருவாகிய அச்சத்தாலேயே, நேரு பண்டிதரைக் கொண்டாவது தி. மு. க.வைத் தாக்கச் சொல்வோம் என்கிற நிலைக்கு வந்திருக்கிறார்.

'தி. மு. க.' என்றால் சிந்தனையில் அப்படியொன்று இருப்பதாகவே காட்டிக்கொள்வது ஆகாது—கூடாது— எனக் கருதியோர், இன்று குத்துகிறது குடைகிறது என்று கருதுகிற அளவுக்கு தி. மு. க. வளர்ந்திருக்கிறது.

நாட்டு அரசியல் வாழ்வில், தி. மு. க. வுக்கு இப்படி ஒரு கட்டம் ஏற்பட அனுதினமும், உயிரையும் துச்சமென மதித்து உழைத்திடும் எண்ணற்ற வாலிப நண்பர்களே! தொழிலாளர்களே! மாணவ மணிகளே! வசதியற்ற கழகம் பெற்றிருக்கும் வாய்ப்பினை மனதிலே கொள்ளுங்கள். எலியென நினைத்தோர், புலியென மருளும் பொன்னான நிலை பெற்றிருக்கிறது, தி. மு. க. காரணம், நாம் தாங்கியிருக்கும் கொள்கைகள்! ஏந்தியிருக்கும் இலட்சியங்கள்!! அவைகளை உள்ளத் தூய்மையோடு எடுத்துச் சொல்லுகிறோம்—பெற்றிருக்கும் சக்தியைப் பெரிதாக்கும் நேரம் இது.

இப்போது, மாற்றாரிடம் அச்சம், அரும்பியுள்ளது. இது பெருகவேண்டுமாயின், நமது சக்தி பன்மடங்காக வேண்டும்! நமது கொள்கைகள், குடிபுகாத இடங்களிலெல்லாம் புகுந்தாகவேண்டும்!! அதற்கு, இந்தத் தேர்தலை விட, அரியதோர் வாய்ப்புக் கிடையாது. வாய்த்த சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வோம். வீட்டுக்கு வீடு சென்று, சரியும் காங்கிரசையும், அது நடாத்திடும் தர்பாரால் விளையும் விபரீதங்களையும் எடுத்துரைப்போம். இல்லங்கள் யாவும் நமது கோட்டைகளாகட்டும். ஏழையர் உள்ளமெல்லாம், நமது கொள்கைகள் நிறையட்டும். அந்த நிலை வந்துவிட்டால், நம்முடைய இயக்கத்தைப் பிறகு எவ்வளவு பெரிய நேருக்கள் வந்தாலும், ஒன்றும் செய்துவிட முடியாது. நாம் பெற்றிருக்கிற சக்தி தெரிகிறது—பெறவேண்டியது எவ்வளவு இருக்கிறது என்பதும்விளங்குகிறது. இரண்டையும் மனதிலெண்ணி, பாடுபடுங்கள் என்று அன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறோம். மலையசைகிறது — மன இருள் கொண்டிருப்பது தெரிகிறது. மகிழுங்கள்! இந்த மகிழ்ச்சி நிரந்தரமாக, உழையுங்கள்—உழையுங்கள்— உண்மை நிலைக்கும்—உழைப்பு வெல்லும்.

★

# இலாபங்கள் போவதெங்கே!

"ஐம்பது கோடி வேண்டும்!"

"இருந்தால் கொடுக்கலாம். இல்லையே, எங்களிடம்"

"அது தெரியும் எனக்கு. இல்லையென்றால் எஃகும் இரும்பும் எப்படி உற்பத்தியாக முடியும்?"

"உண்மைதான்! ஒரு யோசனை சொல்லுங்களேன்."

"சரி! இந்தப் பணத்துக்கு நான் எங்காவது ஏற்பாடு செய்துகொள்ளட்டுமா?"

"ஆகா! ரொம்ப நல்லது. வேண்டாமென்று சொல்லப்போகிறோம் நாங்கள்"

ஆலையரசர், பணம் கேட்கிறார்! அதற்கு அரசாங்கம் இவ்வண்ணம் பதில் தருகிறது!!

உடனே ஆலையரசர் விமானம் ஏறி எங்கே பணம் கிடைக்கும் என்று கிளம்புகிறார். அமெரிக்காவில் போய் இறங்குகிறார்—அங்குள்ள முதலாளிகளைப் பார்த்துப் பேசுகிறார். முதலை எங்கு கொண்டு போய்ப் போடுவது என்று தவிக்கும் அவர்கள், உடனே சம்மதம் தரத் தயங்குகின்றனர்.

"ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்?" —கேட்கிறார், போனவர்.

"இல்லை! உங்கள் நாட்டில் சோஷியலிசம் அது இது என்று பேசப்படுகிறதே. போடுகின்ற முதல் பத்திரமாக வந்து சேருமோ என்று நான் சந்தேகப்படுகிறோம்," என்கின்றனர், அவர்கள்.

போனவர், அமெரிக்காவிலிருந்தபடி இந்தச் சேதியை அனுப்புகிறார், நேரு பண்டிதருக்கு! மறு நாள் எங்காவது பேசும் கூட்டத்தில், நேரு அவர்கள் விளக்கம் தருகிறார், "தனிப்பட்டோர் போடும் முதலுக்கு, தக்க பாதுகாப்பு அளிப்போம். யாரும் அச்சப்படத் தேவையில்லை. எல்லாத் தொழில்களையும் சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும் என்கிற திட்டம் இப்போது இல்லை. இதுதான் மாடல் சோஷியலிசம்" என்பதாக.

போனவர் இந்த உறுதி மொழியைப் படித்துக் காட்டுகிறார்! பணம் கிடைக்கிறது — 'பாரதம்' வருகிறார்!!

* * *

குபேரர் டாடா, தனது உருக்கு ஆலைக்கு, இப்படித்தான் 50 கோடிக்கு மேல் பெற்றிருக்கிறார், அமெரிக்கப் பிரபுக்களிடமிருந்து.

அனுதினமும் ஏடுகளில் படிக்கிறோம், சர்க்கரை ஆலை ஜெர்மன் கம்பெனியுடன் ஒப்பந்தம், கண்ணாடித் தொழிற்சாலை பெல்ஜியம் கம்பெனியுடன் ஒப்பந்தம், இங்கிலீஷ் கம்பெனியும் இந்தியக் கம்பெனியுமாகச் சேர்ந்து சைகிள் தயாரிக்கும் என்கிற செய்திகளை.

இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்ததால்தான், இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தபோது சொன்னோம்—மஞ்சளும் வெள்ளையும் கூடிக்குலவப் போகிறது! இந்திய முதலாளிகளும் அந்நிய முதலாளிகளும் சேர்ந்து நம்மைச் சுரண்டப் போகிறார்கள் என்று!!

நாட்டின் தொழிலபிவிருத்தி ஓங்கவேண்டும் என்கிற போர்வையில், இந்தியக் குபேரர்கள் வெளிநாட்டுக் கோடீசுவரர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இன்றையதினம் பல ஆலைகளை ஆங்காங்கும் அமைத்து வருகிறார்கள். மக்கள் முன் தன் சாதனைகளை விளக்கியாக வேண்டிய நிலையிலிருக்கும் காங்கிரஸ் அரசும், இதற்குச் சம்மதம் அளித்து வருகிறது!

இப்படி ஆலைகள் எழும்பினால், உற்பத்தி பெருகுமென்றும், பலருடைய வேலையில்லாக் கஷ்டம் நீங்குமென்றும் கூறப்படுகிறது. உண்மைதான். ஒரு ஆலையால், பல நூறு பேர் வாழ முடியும்—பல புதிய பொருள்கள் கிடைக்கவும் இயலும்.

சோப்புக்கும் சீப்புக்கும் 'கப்பல் இறக்குமதி'யை எதிர்பார்த்து காலந்தள்ள வேண்டியதில்லை! சைகிளுக்கும் சர்க்கரைக்கும் இன்னொரு நாட்டாரை எதிர்பார்த்து வாழவேண்டியதில்லை!!

இப்படி எதிர்பார்த்து வாழாத நிலைமட்டுமல்ல, ஆலைகள் இங்கே இருந்தால், அவைகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் மக்களுக்கு விலை குறைவாகவும், வாங்கக் கூடிய நிலையிலும் கிடைக்கும்.

அந்த நிலை உருவாகியுள்ளதா எனிலோ, அச்சமும் துயரமுமே உருவாகிறது. பொருள்கள் இங்கு தயாரிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள்—ஆனால், அவைகள் குறைவான விலைக்கு, மக்கள் வாங்கக் கூடிய நிலைக்கு கிடைக்கிறதா என்றால்? இல்லை!!

காரணம், ஆலைகள், இந்திய முதலாளிகளுக்கும், அந்நிய முதலாளிகளுக்கும் இலாபம் தரவேண்டிய நிலையில்தான் உள்ளன.

முதல் போட்டவனுக்கு இலாபம் தான் முக்கியமே ஒழிய, மக்களின் வசதிகளோ — மக்களை நன்கு வாழச் செய்வதோ, அல்ல. அதனால், இரு முதலாளிகளுக்கு நாம் இலாபம் தரவேண்டியிருக்கிறது!!

ஒரு ஆலையில் ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் இலாபம் என்றால், அது இரு முதலாளிகளின் பணப் பெட்டிக்குத்தான் போகிறது! மக்கள் கொடுத்து வாங்கிய அந்தப் பணத்தைக்கொண்டு அந்த முதலாளி விரும்பினால் இன்னொரு ஆலை கட்டலாம்—கொஞ்சம் 'தர்பார்'ப் புலியாக இருந்தால் ஆடம்பரத்திலும் அட்டகாசத்திலும் செலவழிக்கலாம்!! அவன் பெட்டிக்குப்போன பணம், மீண்டும் மக்களின் நன்மைகளுக்காக நாட்டில் நடமாடும் என்கிற நம்பிக்கை கிடையாது.

அதே ஆலை, சர்க்காருடையதாக இருந்தால், கிடைத்த இலாபம் அரசாங்கத்தைச் சாரும். பணமின்றி வாடும் அரசாங்கம், தன்னிஷ்டப்படி மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து தரலாம். **அதனால்தான், முற்போக்கு மனம் படைத்தவர்கள் அனைவரும், தேசத் தொழில்கள் அனைத்தும் தேசீயமயமாக வேண்டும் என்கிறார்கள்.**

* * *

இதோ, தேசியமயமாக்கப்பட்ட ஒரு ஆலை! இங்கல்ல, ருஷியாவில் இருப்பது. அதில் கிடைக்கும் இலாபம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதை'சோவியத் நாடு' என்ற ஏடுதரும் ஒரு கட்டம் கூறுகிறது,

ஆலையின் வரவு, செலவு இலாபம்பற்றிய விளக்கங்கள் தலைமைக் கணக்காயரால் தரப்படுகின்றன.

ஆலையின் சென்ற வருட இருப்புநிலைக் குறிப்பு இதோ உள்ளது. சென்ற வருடம் ஆலைக்கு நான்கு கோடி ரூபிள்கள் ஆதாயம் கிடைத்திருக்கிறது. ஆலையின் முதல் ஒரு கோடி இருபது லட்சம் ரூபிள்கள்தான் என்பதைக் கணக்கிலெடுத்துக் கொண்டால், மிகவும் இலாபகரமாக ஆலை இயங்கிக்கொண்டிருக்கிறது என்று துணிந்து கூறலாமல்லவா?

இந்த நான்கு கோடி ரூபிள்கள் எப்படிச்செலவழிக்கப்படுகின்றன.

இருபது லட்சம் ஆலையினுடைய நிதியாக ஒதுக்கப்படுகிறது. டைரக்டருடைய பொறுப்பில் இந்த நிதி இருக்கும். இந்த இருபது லட்சங்கள் எப்படிச் செலவழிக்கப்படுகின்றன? இயந்திர சாதனங்களையும், தொழில் நுட்பத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக ஆலோசனைகளைக் கூறியதீவிர தொழிலாளர்களுக்கு வெகுமதிகள் அளிப்பதில் இந்த நிதியின் கணிசமான பகுதி செலவழிக்கப்படுகிறது. வெகுமதிகள் 200 ரூபிளிலிருந்து 36,000 ரூபிள் வரை, தொழிலாளரின் ஆலோசனையால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஆதாயத்திற்கு ஏற்றாற்போல, அளிக்கப்படுகின்றன. ஆலைத் தொழிலாளர்கள் சுகவாச ஸ்தலங்களுக்குச் செல்லும் விஷயமாகவும் இந்த நிதியிலிருந்து ஒரு பகுதி செலவழிக்கப்படுகின்றது. (அதாவது தொழிற்சங்கங்கள் இந்த விஷயத்திற்ககே ஒதுக்கியிருக்கும் நிதிகளுக்குமேல் தனியாக ஆலை நிதியிலிருந்தும் மேற்கூறிய பணம் செலவழிக்கப்படுகிறது,) தொழிலாளர்களுடைய குழந்தைகள் சந்தோஷமாகக் கோடைவிடுமுறையைக் கழிப்பதற்காக, இந்த நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபிள்களை ஆலை நிர்வாகம் செலவழித்தது. பசுமையான மரங்கள் அடர்ந்த காட்டில் ஒரு மாளிகை வாடகைக்கு எடுக்கப்பட்டு, குழந்தைகளின் கோடைமுகாம் நடத்தப்பட்டது. வெவ்வேறு எதிர்பாராத செலவுகளுக்குப் பண உதவி அளிக்க வேண்டுமெனக் கோரி விண்ணப்பித்துக்கொண்ட சுமார் 300 தொழிலாளர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் இந்நிதியிலிருந்து பண உதவி செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, புதிதாகத் திருமணம்செய்துகொண்ட தம்பதிகள், புதுக் குடித்தனம் வைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர், ஆலையில் இளம் வயதுடைய தொழிலாளர்கள் அநேகம் பேர் உள்ளனர். எனவே, திருமணங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன.

நான்குகோடி ரூபிள் ஆதாயத்திலிருந்து மேலும் இருபது லட்சங்கள், இவனோவா நகரிலுள்ள சகல ஆலைகளும் உறுப்பினர்களாயிருக்கும் பஞ்சாலைக் கழகத்தின் வசம் ஒப்படைக்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு வீடுகளைக்கட்டுதல் சுகவாச ஸ்தலத்தை நிர்மாணித்தல், இரண்டு ஆராய்ச்சி நிலையங்களை நிர்வகித்து நடத்தல்போன்ற பஞ்சாலைத் தொழிலாளர்களின் பொதுவான தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தத் தொகை செலவழிக்கப்பட்டது.

மீதமிருக்கும் மூன்று கோடி அறுபது லட்சம் ரூபிள்கள் அரசாங்க வரவு செலவுக் கணக்கிற்கு மாற்றப்பட்டுவிடுகின்றன, அதாவது மொத்த ஆதாயத்தில் 90-சதவிகிதம் அரசாங்கக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. இந்த ஆலையின் தேவைகளுக்காக இந்த நிதியில் பாதியை அரசாங்கம் செலவழித்துவிடுகிறது.

ஆலைத் தொழிலாளர்களில் சுமார் 80-சதவிகிதத்தினர் பெண்கள். எனவே, தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக, குழந்தைப் பள்ளிக்கூடங்களையும், குழந்தை பராமரிப்பு நிலையங்களையும் அரசாங்கம் நடத்தி வருகிறது. இதற்காக 27-லட்சம் ரூபிள்களை அது செலவழித்துள்ளது. தற்சமயம் ஆலைத் தொழிலாளருக்காக இரண்டு குழந்தை பராமரிப்பு நிலையங்கள் உள்ளன. ஆறு மாதத்திலிருந்து மூன்று வருடங்களுக்குட்பட்ட 300-குழந்தைகளுக்காக ஒரு நிலையமும், மூன்று வருடங்களுக்குமேல் ஏழு வருடங்களுக்குட்பட்ட 340 குழந்தைகளுக்காக மற்றொரு நிலையமும் உள்ளன.

எனவே, ஆலையின் மூலம் கிடைக்கும் ஆதாயத்தில் பாதித் தொகை, ஆலையின் தேவைகளுக்காகவே செலவழிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறதல்லவா?

மீதியிருக்கும் பணம் தேசியப் பொருளாதாரத்தின் இதர பிரிவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. புதிய தொழிற்சாலைகள், மின்சார நிலையங்கள், பள்ளிகள். தொழிற் கல்லூரிகள், இரயில்வேக்கள், ரோடுகள் முதலியவற்றை நிர்மாணிப்பதற்காக அப்பணம் செலவழிக்கப்படுகிறது. நாட்டின் பொதுவான பொருளாதார, கலாச்சாரத் தேவைகளுக்காகவும் பென்ஷன்களுக்காகவும், தற்காப்புக்காகவும் கூட இது செலவழிக்கப்படுகிறது. ஒவ்வொரு ரூபிளும் சரியான முறையில் செலவழிக்கப்படுவதற்கு உத்தரவாதமளிக்கும் முறையில் நிதியைத் திட்டமிட்டு அரசாங்கம் ஒதுக்குகிறது. ஆலையிலுள்ள எல்லாத் தொழிலாளர்களும்சிப்பந்திகளும் இதில் மிகவும் அக்கறைகொண்டிருக்கின்றனர்.

* * *

ஆலைகள் தேசிய மயமாக்கப்பட்டால் இதுபோல நாமும் ஏன் செய்யக்கூடாது? அந்த இலாபங்களைக் கொண்டு என்னென்னவோ செய்துகொள்ளலாமே!!

அவ்வண்ணம் நேரிடின், ஆலைத் தொழிலாளி அதிகக் கூலிகேட்டு ஆறு மாதம் மூன்று மாதம் என்று வேலை நிறுத்தம் செய்யப் போகிறான், அவனை அடக்க 'கான்பூர்'களும் 'வால்பாறை'களும் நடத்தப்பட்டு, மக்களைச் சுட்டுப் பொசுக்கும் நிலை ஏன் உருவாகப் போகிறது? காங்கிரஸ் ஆட்சியில் அதிகக் கூலியும், நிறைய வசதிகளும் கேட்டால், வெகு எளிதில் துப்பாக்கிக் குண்டும், தடியடியும் தரப்பட்டுவிடுகிறது! அதனால், அவன் பசியுள்ள புலிபோல் உலவுகிறான், இன்று!!

இலாபங்களை, தனிப்பட்டோருக்குப் போகும்படி செய்யமாட்டோம்—என்றுதான், சுயராஜ்யப் போராட்டத்தின்போது சொன்னார்கள் காங்கிரஸ்காரர்கள்!!

ஆனால், இன்று அப்படிச் சொன்ன காங்கிரசுகாரர்களிலே பலர் அங்கு இல்லையே! பணமூட்டைகளும், 'ராஜா சர்'களும் தானே அங்கு இருக்கிறார்கள். அதனால், காங்கிரசுக்கு, அவர்களைத் திருப்திப்படுத்தும் அவசியம் நேர்ந்துவிட்டது—முன்னே சொன்னதைச் செயலாக்க இயலவில்லை.

இந்தச்சோகம் போகவேண்டுமேயானால், உண்மையான சமதர்மக் கொள்கையை உள்ளத்திலே கொண்டோரின் ஆட்சியே மலர வேண்டும். அந்நாள் வந்தால் தான், இலாபமும் நல்வாழ்வும், மக்களின் சொத்தாகும். அரசும் நல்லமுறையில் இயங்கும்-இதற்கு வழிவகை காணும். ★



# தமிழ் முழக்கம் அங்கே!

முதலாவது சட்டமறுப்பு இயக்கம், அதாவது சிங்கள 'சிறீ' எதிர்ப்புப்போராட்டம் மட்டக்களப்பிலே ஆரம்பமாகி 28-1-57 முதல் பத்துத்தினங்கள் மகத்தான வெற்றியுடன் கழிந்துவிட்டன. கடந்தபத்துத்தினங்களும், மட்டக்களப்பின் தமிழ்ப் பேசும் மக்களின் சரித்திரத்தில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்படுமென்பதில் சந்தேகமேயில்லை!

மட்டக்களப்பின் கடந்த கால சரித்திரத்திலே, இதற்கு முன், அரசாங்கத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ஒரு இயக்கத்தில் இத்தனை ஆர்வத்துடன் பங்குபெற்று, தங்கள் முழுக் கடமையையும் உணர்ச்சியுடன் செய்து முடித்தது கிடையாது! ஆனால்...'சிறீ' எதிர்ப்புப் போராட்டத்தின் ஒவ்வொருநாளும் மக்கள் உற்சாகத்துடன் திரண்டார்கள்--சட்டமறுப்பில் மகத்தான வெற்றியடைந்தார்கள்.

பத்துத்தினங்களாகமட்டக்களப்பிலே தமிழ் வாழ்த்தொலி வானைாவ ஒலித்துக்கொண்டிருக்கின்றது. 'தமிழ் வாழ்க!' என்ற கோஷம் ஒவ்வொரு [illegible]மும் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. மட்டக்களப்பு மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்......மட்டக்களப்புக்கு விஜயம் செய்த தலைவர்கள் பிரமித்தார்கள்! 'மட்டக்களப்பிலே இத்தனை ஆர்வமா? எதிர்பார்க்கவேயில்லை' என்று கூறிப் புகழ்பாடினார் திரு. ஏ. அமிர்தலிங்கம், எம். பி. 'யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பு மிஞ்சிவிட்டது' என்று மகிழ்ச்சியுடன் மலைத்து நின்றார் ஊர் காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா; 'உணர்ச்சி பொங்கும் இந்த நாட்டையா பண்டாரநாயகா சிங்கள நாடாகிவிட்டது என்று சொன்னார்?' என்று கோபத்துடன் வியந்து பாராட்டினார் தமிழரசுத் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம்!

சட்டமறுப்புக்கு இத்தனை ஆர்வமும் ஆதரவும் இருக்கும் என யாருமே எதிர்பார்க்கவேயில்லை... வீட்டிலே ஒதுங்கிக்கிடந்த பெண்கள் வீதிகளிலே தொண்டர்களாக அன்புப்பணி புரிந்தார்கள் ...புத்தகப் புழுக்களாக இருந்த மாணவ மாணவிகள், 'சிறீ'யை எதிர்க்கத் திரண்டார்கள்...தொழிலையும்தொலைத்துவிட்டுத்தொல்லைமிகுதொண்டர் படையிலே தொழிலாற்றச் சேர்ந்தார்கள் நூற்றுக்கணக்கான தொண்டர்கள்...மக்கள் குரலுக்கு செவிசாய்த்த நகரசபை மகத்தான ஆதரவு கொடுத்தது...மன்றங்களும், சங்கங்களும் தொண்டர்களைத் திரட்டி உதவின—ஆதரவு......எங்கும் ஆதரவு மலர்ந்தது. இவைகளின் துணையுடன் மட்டக்களப்பு த. பே. மக்கள் சரித்திரத்திலே பதிந்துவிட்டார்கள்!!

இலங்கை சர்க்கார், கார் நம்பர் தகடுகளில் தமிழுக்குப் பதில் சிங்கள எழுத்துக்களையே பொறிக்கவேண்டும் என்று பிறப்பித்த உத்தரவையொட்டி அங்கே 'அறப்போர்' நடந்து வருகிறது. அது பற்றி 'சுதந்திரன்' தரும் செய்தி, இது. துயரங்கள் கோட்ட வாழ்ந்தாலும் தாய் மொழிக்கு வரும் கேட்டினைக் களைய வீரமுழக்கம் எழுப்பும் இலங்கை வாழ் தமிழர்களை வாழ்த்துகிறோம்.

இருநூற்றுக்கு மேற்பட்ட பஸ்களையுடைய 'ஈஸ்டன் பஸ் கம்பனி'யின் மானேஜிங் டைரக்டர் தனது மோட்டாரில் தமிழ் எழுத்துக்களைப் பொறிக்க மறுத்தார். அடுத்த நாட்காலை என்ன நடந்தது...? பொதுமக்கள் சகல பஸ்களையுமே பகிஷ்கரித்தனர்! இடமில்லாமல் பிரயாணிகளால் நிறைந்து தினமும் சென்ற பஸ்கள் வெறுமனே நகரை விட்டு வெளியேறின... இரண்டு தினங்களில் பஸ் கம்பெனி சுமார் ஏழாயிரம் ரூபாய் நஷ்டமடைந்தது... பின் தலைவணங்கினார்கள் பஸ் கம்பெனி முதலாளிகள்! மக்கள் குரலுக்கு கௌரவமாக மதிப்புக் கொடுத்தார்கள்!

பஸ்கள் தமிழெழுத்துடன் ஓடும் என்ற செய்தியை, பஸ் நிலையத்தில் திரண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் உணர்ச்சி வசப்பட்டு, கோட்டமுனைப் பாலத்தின் மதிலிலே தாவி ஏறி நின்று அறிவித்த மட்டக்களப்பு எம். பி. திரு, செ. இராஜதுரை சொன்னார்: "மக்கள் குரலுக்கு அனுகுண்டைவிடச் சக்திஉண்டு. எந்த அரசாங்கமோ, ஸ்தாபனமோ மக்கள் குரலுக்கு மதிப்புக் கொடுத்தேயாக வேண்டும்!"

புற்றீசல்கள் போல ஊர்வலங்கள்! வானைக் கிழிக்கும் உணர்ச்சிக் கோஷங்கள், க்ஷணத்திற்கு க்ஷணம் நடைபெறும் தொண்டர் அணிவகுப்புகள், நகரில் எங்கு பார்த்தாலும் ஓடித் திரியும் தமிழிலக்கக் கார்கள், திரள் திரளான பெண்கள் கூட்டம், முஸ்லிம் மக்கள் அளித்த சொல்லமுடியாத ஆதரவு—செய்த பணி எல்லாம் ஒன்றைத்தான் உறுதிப்படுத்தின "மொழி காக்க—உரிமைகளைப் பெறத் தமிழ்பேசும் மக்கள் விழித்தெழுந்துவிட்டார்கள்! அவர்களைத் தடுக்க இனி எந்த சக்தியினாலும் முடியாது!"

★

## புரியவில்லை

ஏராளமான பணத்தை இந்தக் காலத்துச் சர்க்கார்கள் செலவழிக்கின்றனவே, இதுபற்றி இரண்டே இரண்டு விஷயங்கள்தான் நமக்குப் புரியவில்லை: ஒன்று, இந்தப் பணம் எங்கேயிருந்து வருகிறது என்ற விஷயம்; மற்றது, இது எங்கே போகிறது என்ற விஷயம்.

"க்ரீட்"

# ஹாட்டும்-கதரும்

—பழநி—

"அங்கியன்,
ஆதிபத்ய வெறியன்,
அடக்குமுறைக்காரன்
ஆவிகள் குடிப்பவன்
வளத்தைச் சுரண்டுகிறான்
வரிகள் போடுகிறான்
அவன் ஆள்வதா
நாம் மாள்வதா"

என்று முழங்கி வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினர் காங்கிரசார்—அன்று!

அங்கியர்,
ஆதிபத்தியக்காரர்
அடக்குமுறை ஏகபோகி
ஆவிகள் குடிக்கின்றார்
வரிவகை கர்த்தா
வளத்தைச் சுரண்டுகின்றார்
அவர் ஆள்வதா
நாம் மாள்வதா,

என்று முழங்கி, வடநாட்டுச் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராகப் போராடுகிறோம் நாம் — இன்று.

கண்ணியம் தவறாமல், கட்டுப்பாடு குலையாமல், கடமையை ஆற்றுகிறோம்.

ஹாட்டை (தொப்பி) வெளியே அனுப்பிவிட்டு கதர் புகுந்தது. ஆனால் அது,

ஆணவப்போக்கு
அடக்குமுறை
சுரண்டல்,

இவற்றை மட்டும் தன்னோடு வைத்துக்கொண்டுள்ளது. ஹாட் -அங்கியன், சுரண்டுவது, அடக்குமுறை வீசுவது. அதுபோன்றே கதர்—நமக்கு.

ஹாட்டை வெளியேற்ற கதர்!
தந்திக்கம்பிகளை அறுத்தல்
தபாலாபீசுகளைக் கொளுத்தல்
ரயில்களைக் கவிழ்த்தல்,

இவை போன்ற பலாத்தாரச் செயல்களில் கூடக் கதர் ஈடுபட்டது. ஆனால் நாம், நம் உரிமை முழக்கத்தை,

அமைதியான முறையில்
கடமை குலையாமல்
கண்ணியம் கெடாமல்,

எடுத்துக் கூறி வருகிறோம். தபாலாபீசுகளைக் கொளுத்தியதையும், தந்திக்கம்பிகளை அறுத்ததையும் கதர் அழைக்கிறது — தேசியம், விடுதலை உணர்ச்சி என்ற திருநாமங்களால். உரிமையை எடுத்துக் கூறும் நம் அமைதியான முறையை, பலாத்காரம் என்று பகர்கிறது-கதர்! ஆம். நேரு பேசுகிறார் சென்னையில் "பிரிவினை பேசி பலாத்காரச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். இது அவலமானது" என்று. மாநிலப் புனரமைப்பில், பலவகையிலும் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டபோது கூட, நாம் செல்லவில்லை — சுதந்திரப் போராட்டத்தில் கதர் காட்டிய பாதையில்! சென்னை "பம்பாயாக" மாறவில்லை. ஆனால் கதர்தான் ஹாட்டாக மாறிவிட்டது. துப்பாக்கிகளையும் குண்டாந்தடிகளையும் உபயோகப்படுத்தியது; சிறைகளின் உபயோகத்தை தெளிவாக, விரிவாக எடுத்து கூறியது.

அன்று வெள்ளையர்களைப் பார்த்து,

அங்கியனே
வெளியேறு
சுரண்டாதே

என எழுப்பிய முழக்கத்தை, தேசியம், விடுதலை உணர்ச்சி எனச் சிந்து பாடுகிறது கதர். ஆனால் இன்று நம் உரிமை முழக்கத்தையோ,

தேசத் துரோகம்
வகுப்புவாதம்
குறுகிய மனப்பான்மை.
முட்டாள்தனம்
காட்டுமிராண்டி
விவேகமற்றது
கோமாளித்தனம்
அவலமானது
—(சென்னையில் நேரு)

என்று வசைபுராணம் பாடுகிறது.

கதர் செய்யும் கொடுமைகளைப் பார்க்கும்போது, ஹாட் செய்த கொடுமை, நமக்குப் பெரிதாகத் தோன்றமுடியாது. ஹாட் 1500 ரவுண்டுகள் சுட்டதென்றால், கதர் 2500-ரவுண்டுகள் சுட்டிருக்கிறது. ஹாட் அன்று இந்தியாவைச் சுரண்டியது. கதர் இன்று திராவிடத்தைச் சுரண்டுகிறது.

மொழி
வளம்
உழைப்பு

ஆகிய எல்லாவற்றையும் சுரண்டுகிறது வடநாடு. ஹாட் அரசியலில் உலவாத புதுப்புது வரிகள் இந்த 'கதர்' ஆட்சியில் நிலவுகின்றன.

200-கோடியில் தாமோதர்
133-கோடியில் பக்ராநங்கல்,

போன்ற அணைகள்,

15-கோடியில் சித்தரஞ்சன்
23-கோடியில் சிந்திரி

போன்ற தொழிற்சாலைகள்.

இப்படித்திட்டமென்று சொல்லி தென்னாட்டைப் புறக்கணிக்கிறது. வடநாட்டுத் தொழிலாளியைவிட தென்னாட்டுத் தொழிலாளி குறைவாகத்தான் சம்பாதிக்கிறான்,

வடக்கே,
உழவன் ஆண்டுக்கு 117-ரூ.
பொறித்தொழிலாளி 600,

ஆனால் தெற்கிலோ, உழவன் 9 ரூபாயும், பொறித் தொழிலாளி 300. ரூபாயும்தான் சம்பாதிக்கின்றனர். இத்தொழிலாளிகளின்வருமானத்தை உயர்த்த முயற்சி செய்யவில்லை இந்த 'கதர்'

ஹாட் வெளியேற்றம்-நடந்து போனது

கதர் வெளியேற்றம் — இனி நடக்கப்போவது.

ஆம். அதற்கான நல்ல வாய்ப்பு இதோ வரும் பொதுத் தேர்தல்.

# ஜனநாயகம் நிலைக்க....

நாட்டு ஜீவநாடியான பொது மக்கள், மார்ச் 4-ஆம் தேதியும், அதற்கு முன்னாலே முதல் தேதியும், பிறகு 6-ம் தேதியும், 8-ம் தேதியும், 11-ம் தேதியும் என்று வைத்திருக்கின்ற இந்தத் தேர்தலில் எந்தவகையிலே தீர்ப்பளிக்கின்றார்களோ அதைப் பொறுத்துத்தான் நாட்டினுடைய எதிர்காலம் உருவாக இருக்கின்றது. அதைப் போலவே, நாடு எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்றீர்களோ, அதற்கேற்பத்தான் ஆட்சி அமையும்.

மண்ணினுடைய வளம் எப்படியோ அப்படித்தான் பயிர் இருக்கும் என்பதைப்போல், நூலினுடைய திடம் எப்படியோ அப்படித்தான்வேட்டிசேலை இருக்கும் என்பதைப்போல், நெய்பவனுடைய திறமை எப்படியோ அப்படித்தான வேட்டி சேலையில் நயம் இருக்கும் என்பதைப்போல், பொது மக்கள் அளிக்கின்ற தீர்ப்பைப்பொறுத்துத்தான்எதிர்கால அரசியல் வாழ்வு உருவாக இருக்கிறது. ஆகையினாலே மார்ச்சு மாதம் நடைபெறுகின்ற தேர்தலில் நீங்கள் காட்டுகின்ற பொறுப்புணர்ச்சி முக்கியமானது.

நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாடு உலகத்திலேயே பழம் பெருமைகளில் முதன்மையானதாக இருந்தது. ஒரு காலத்திலே தமிழ் நாட்டினுடைய அருமை பெருமை உலகத்திலே இருக்கிற பல்வேறு நாடுகளிலே பரவி, தமிழ் நாட்டின் முத்தும், தமிழ் நாட்டினுடைய சந்தனமும், தமிழ்நாட்டின் அகிலும், தமிழ்நாட்டிலே நெய்யப்பட்ட பட்டுப் பட்டாடைகளும், ரோம் நாடு வரையிலே சென்றது என்று — புராணங்கள் அல்ல— இதிகாசங்கள் அல்ல—வரலாறு நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் இருந்த தமிழ் நாட்டில் (இதே) காஞ்சிபுரத்திலிருந்து புத்த மார்க்கத்தைப் போதிப்பதற்காகப் புத்தப் புலவர் சைனாவரையிலே சென்றார் என்று வரலாறு சொல்கிறது.

**5—2—57-ல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் சி. என். ஏ. ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது.**

வடநாட்டிலே எத்தனையோ மன்னர்கள் கொடிகட்டி ஆண்டார்கள் என்று வரலாறு சொல்கிறது.

அசோகன் ஆண்டான், அக்பர் ஆண்டான், ஔரங்கசீப் ஆண்டான், கனிஷ்கன் ஆண்டான், சந்திரகுப்தன் இருந்தான், சமுத்திரகுப்தன் இருந்தான் என்றெல்லாம் சொல்லப்பட்ட அந்தக் காலத்திலேயும் நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழ்நாடு, யாருக்கும் தாள் பணியாமல், யாரையும் தாழ்த்தாமல், யாருக்கும் தாழ்ந்துவிடாமல், தலைநிமிர்ந்து வாழ்ந்ததாக நமக்கு வரலாறு இருக்கிறது.

இவைகளை எல்லாம் வரலாற்றிலே படித்தும் இலக்கியத்திலே தெரிந்துகொண்டும் இருக்கிற நம் தமிழ் நாட்டு மக்கள், இன்றைய தினம் எந்த நிலையில் தமிழ்நாடு இருக்கிறது என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருக்கட்டும், கம்யூனிஸ்ட்டுகளாகட்டும் சோஷலிஸ்டுகளாகட்டும், எந்தக் கட்சியும் சேராத கனவான்கள் ஆகட்டும், அதைப்பற்றிக் கவலை இல்லை, தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்துகொண்டு வருகின்ற நாட்டு நிலைமையைப்பற்றி, முன்னாலே இருந்த நிலைமையையும், இன்றையதினம் இருக்கின்ற நிலைமையையும் அவர்கள் அருள் கூர்ந்து ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

யாராவது நம் வீதியிலே இருக்கிற ஒருவர் வெளியூருக்குப் போய் விட்டு 6-மாதத்திற்குப் பிறகு திரும்பிவந்தபோது, முன்னாலே இருந்ததைவிட இளைத்திருந்தால் எவ்வளவு அன்போடு அவரை விசாரிக்கிறோம்?

"என்ன அம்பலவாண முதலியாரே ஏன் இப்படிக் கயிறுபோல் ஆகிவிட்டீர்கள்? முன்னாலே எல்லாம் பீமராஜாபோல இருப்பீர், இப்போது என்ன இப்படி இளைத்துவிட்டீர்கள்? முன்னாலே எல்லாம் 4-மைல் 5-மைல் தளராமல் நடப்பீர்கள், இன்றைய தினம் ஒரு பர்லாங் நடந்தால் ஏன் பெருமூச்சு வாங்குகின்றது? ஏன் உடம்பெல்லாம் கறுத்திருக்கிறது? ஏன் கண்கள் எல்லாம் மஞ்சளாகி இருக்கின்றன?" என்று நாம் கேட்க, அவரும் பரிதாபத்தோடு நம்மிடத்திலே எடுத்துச் சொல்லுவார்,

"அப்பா, எனக்கு நோய் வந்துவிட்டது, மஞ்சள் காமாலை என்கிறார் ஒரு வைத்தியர், இல்லை, காசம் என்கிறார் ஒரு டாக்டர்,

அது அல்ல, குன்மம் என்கிறார் இன்னொருவர், இது அத்தனையும் அல்ல, புழக்கடையான் பிடித்துக் கொண்டான் என்கிறான் பூசாரி. இதிலே எது உண்மை என்று தெரியவில்லை, ஆனால் உடல் மட்டும் இளைத்துவிட்டது, என்று நம்மிடம் பச்சாதாபத்தோடு சொல்வதைப்போல், நாம் வாழுகின்ற இந்த நாடு நம்முடைய முன்னோர்கள் காலத்திலே எப்படி இருந்தது, இன்றைய தினம் எப்படி இருக்கிறது என்பதை, ஒரு ஆள் இளைத்துவிட்டால் விசாரிக்கின்ற அக்கரையைத் தயவுசெய்து நீங்கள் நாட்டினிடத்திலே காட்டுங்கள்.

நீங்கள் கம்யூனிஸ்டுகளாகவே இருங்கள். கார்ல் மார்க்ஸ் பேரிலே ஆணை வையுங்கள்; லெனினைப் பஜியுங்கள்; ஓய்ந்த நேரத்திலே ஸ்டாலினைப் புகழுங்கள்; ஏதாவது கோபம் வந்தால் அவனுடைய கல்லறையைத்தோண்டி வெளியே போடுங்கள்; அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் பிறந்து வளர்ந்த இந்த நாட்டையும் ஒரு கணம் எண்ணிப்பாருங்கள். ஏன் என்றால் எந்தத் திட்டத்தை நீங்கள் புகுத்தினாலும், எப்படிப்பட்ட சமதர்மத்தைக் கொண்டுவந்தாலும், எத்தகைய பொதுவுடைமையைக் கொண்டு வந்தாலும், மண் வளத்திற்குத் தக்கபடிதான் திட்டமிருக்கும். மண் வளம் சரியாக இல்லாவிட்டால் நல்ல விதை போட்டுவிட்டால் மட்டும் போதாது. சந்தேகமிருக்கின்ற தோழர்கள், உதகமண்டலத்திலேயும் பெங்களூரிலேயும் மட்டுமே பயிராகக்கூடிய சில காய்கறிகளை நம்முடைய தோட்டத்திலே பயிரிட்டுப் பாருங்கள். காய்கறி கிடைக்கும். ஆனால் மலரிலே மணம் இருக்காது; காய்கறிகளிலே சுவை இருக்காது, அங்கு இருப்பதைப் போல.

அதைப்போலத்தான் இந்த நாட்டிலே நீங்கள் பொதுவுடைமைத் தத்துவத்தைப் புகுத்தினாலும், எந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றினாலும், இங்கே இருக்கின்ற என்னுடைய மதிப்புக்குரிய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் இராமமூர்த்தி அவர்களே இந்த நாட்டுக்கு அதிபரானாலும் மண் வளத்திற்குத் தக்கபடிதான் சமதர்மம் இருக்கும். ஆகையினாலேதான் மண் வளத்தைக் கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள் என்று உங்களிடத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நான்கூட கலாசாலையிலே படிக்கின்றபோது கேள்விப்பட்டிருக்கின்றேன் வெண்பா புலி வேலுச்சாமி என்ற புலவர் இருந்தார் என்று. நான் தமிழ் கற்றதே காஞ்சிபுரத்திலுள்ள இரண்டு தமிழ்ப் புலவர்களிடத்திலேதான். அதிலே ஒருவர் பெயர் ஏகாம்பர ஐயா என்பது. மற்றொரு புலவர் திருஞானசம்பந்தர். நம்முடைய புலவர் திருஞானசம்பந்தருக்கு வேண்டுமானால் கொஞ்சம் என்னிடத்திலே கோபம் இருக்கலாம். நான் கற்றுக் கொடுத்த புராணத்தை அண்ணாத்துரை இப்படி எல்லாம் பயன்படுத்துகின்றானே என்று கொஞ்சம் கோபம் இருக்கலாமே தவிர, அவரையே நீங்கள் விசாரித்துப் பார்த்தால் நல்ல மாணவன் என்று சொல்லுவாரே தவிர, போக்கிரி மாணவன் என்று சொல்லமாட்டார். ஆகையினாலே இன்றைய தினம் என்னிடத்திலே ஏதாவது தமிழ் அறிவு இருக்கிறது என்றால், அதனைத் தமிழ்நாடு இன்றைய தினம் ஏதாவது ஓரளவு போற்றுகின்றதென்றால், அது காஞ்சிபுரம் அளித்த பிச்சை என்பதைப் பெருமையுடன் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அந்த அளவுக்கு எனக்குத் தமிழ் அறிவும், தமிழ் இலக்கியத்தில் பற்றுதலும் ஏற்படச் செய்த இரண்டு தமிழ்ப் புலவர்களைக் காஞ்சிபுரம் எனக்களித்திருக்கிறது. அதைப்போலவே இன்றைய தினம் தேர்தலில் ஈடுபட்டிருக்கின்ற நான், நீங்கள் எனக்கு அந்த ஏற்றத்தைத் தருவீர்கள் என்ற நல்ல நம்பிக்கையோடுதான் உங்களிடத்திலே தேர்தலைப்பற்றி அதிகம் பேசாமல் இருக்கிறேன்.

நான் உங்களைப் பழைய தமிழ் நாட்டைப் பார்க்கும்படி அழைத்தேன். அந்தப் பழைய தமிழ் நாட்டில், நீர்வளமும், நிலவளமும், குடிவளமும், அறிவு வளமும், அப்பழுக்கற்ற வகையிலே இருந்திருக்கின்றது. அந்தக் காலத்திலேதான் நம்முடைய நாட்டில் சிலப்பதிகாரத்தை இயற்றினார்கள் பெரும்புலவர்கள். அந்தக் காலத்திலேதான் மணிமேகலையை இயற்றினார்கள்; அந்தக்காலத்திலேதான் அகநானூறு பாடினார்கள்; புறநானூறு பாடினார்கள்; அந்தக் காலத்திலேதான் தொல்காப்பியத்தைப் பாடினார்கள்; அந்தக் காலத்திலே பாடாதபாட்டு இல்லை; அப்போது தோன்றாத பெரும் புலவன் இல்லை. அதைப் போலவே, அறிவிலே சிறந்தவர்கள் இருந்ததுமாத்திரமல்ல, வீரத்திலே சிறந்தவர்கள் தமிழகத்திலே ஏராளமாக இருந்தார்கள்.

இங்கிருந்து கிளம்பிய இராஜேந்திர சோழன், பர்மா வரையிலே சென்று வெற்றிக் கொடியை நாட்டிவிட்டு வந்திருக்கின்றான். இங்கிருந்து கிளம்பிய குலோத்துங்க சோழன், இன்றைய தினம் ஒரிசா என்று அழைக்கப்படுகின்ற பழைய கலிங்கத்தை வென்றிருக்கின்றான். அதனைத்தான் கலிங்கத்துப் பரணி என்று தமிழ்ப் புலவர்கள் பெருமையோடு சொல்கிறார்கள். இங்கிருந்து கிளம்பியவர்கள் யவன நாடு வரையிலே வியாபாரம் செய்திருக்கின்றார்கள். இன்றையதினம் தமிழ்நாட்டினுடைய படத்தை நீங்கள் பூகோள பாடபுத்தகத்திலே பார்த்தால், மூன்று பக்கத்திலே அழகான கடலும், கடலை அடுத்து மலைகளும், மலைகளைத் தாண்டி அழகான சிற்றூர்களும், பல சிற்றூர்களுக்கு நடுவிலே பல பெரிய நகரங்களும், சிற்றூர்களுக்கும் நகரங்களுக்கும் வாழ்வும் வளமும் அளிக்கத்தக்க ஆறுகளும், ஆறுகளிலிருந்து பிரிந்து செல்கின்ற வாய்க்கால்களும் வாய்க்கால்களாலே வளமூட்டப்படுகின்ற வயலும், வயலைக் கட்டிக்காக்கின்ற உழவர்களும், உழவர்களுக்கு மானத்தை மறைத்துக்கொள்ள ஆடை தருகின்ற நெசவாளர்களும், நெசவாளர்களையும் உழவர்களையும் போற்றிப் பாடுகின்ற புலவர்களும், இப்படி எல்லாம் இருப்பதைப் பூகோளப்படத்திலே இன்றைய தினம் அமைப்புவரையிலே பார்க்கலாம். இன்றைய தினம் புலவர்களுக்கு அந்த நிலை இல்லை. எங்காவது சீமான்வீட்டுத் திருமணமானால், மணமக்களை வாழ்த்திப் பாட்டுப் பாடுகின்றார்கள். பழையகாலத்துப் புலவர்கள் அப்படி இருந்ததில்லை. மன்னன் தவறி நடந்தால் புலவன் உள்ளே நுழைந்து சென்று 'மன்னா நீ செய்வது தவறு' என்று கண்டித்து உரைத்திருக்கின்றார்கள், ஏரடிக்கும் சிறு கோலிலே



தான் உன்னுடைய யானை ஓட்டுகின்ற பெருங்கோல் இருக்கின்றதென்று, புலவர்கள் எல்லாம் வாதாடி இருக்கின்றார்கள்; போராடியிருக்கின்றார்கள். இவ்வளவு பழம் பெருமை வாய்ந்த நம்முடைய தமிழகம் இன்றைய தினம், எதற்கெடுத்தாலும் டெல்லி, எதற்குத்தொட்டாலும் டெல்லி, எந்த அதிகாரம் என்றாலும் டெல்லி, என்று நோக வேண்டி இருக்கின்றதென்றால், எங்களுடைய உடலிலே ஒரு சொட்டு இரத்தம் இருக்கின்ற வரையில் அதை மாற்றுவதுதான் எங்கள்கடமை. இதிலே எங்களுக்குத் தேர்தல் சாதகமானாலும் பாதகமானாலும் அக்கரை இல்லை. என்னுடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் என்னிடத்திலே கேட்டார்கள், 'அண்ணாத்துரை, நீ திராவிடநாடு பிரிவினையை விட்டுவிடு, உன்னை நாங்கள் ஆதரிக்கின்றோம்' என்றார்கள். நான் அவர்களிடத்திலே திருப்பிக் கேட்பேன் "நீ உன்னுடைய உயிரை விட்டுவிடு, உனக்குக் கலியாணம் செய்துவைக்கிறேன், என்றால் என்னய்யா பொருள்? அதைப் போல என்னைப் பார்த்து, திராவிடநாடு பிரிவினையை விட்டுவிடு, உன்னை நாங்கள் ஆதரிக்கின்றோம்" என்று சொன்னால், நான் திராவிடநாடு பிரிவினையை விட்டுவிட்டால் என்னைக் காங்கிரஸ் அல்லவா ஆதரிக்கும்? கம்யூனிஸ்ட் என்ன! எனக்கும் காங்கிரசுக்கும், எனக்கும் சோசியலிஸ்ட்டுக்கும், எனக்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும், என்ன அடிப்படை வித்தியாசம்?

அவர்கள் அகில இந்தியா என்கிறார்கள். நான் தனித் திராவிட நாடு என்று கேட்கின்றேன். அவர்கள் யானைக்கு கவுன் தைக்க வேண்டும் என்கிறார்கள். ஆகையினாலே தையற்காரர்களுக்கு ஆசை பிறக்கிறது, கவுன் தைத்துக்கொடுக்கலாம் என்று. நான் யானைக்குக் கவுன் தைக்க முடியாதையா, வீட்டிலே இருக்கிற பானையிலே சோறு இருக்கிறதா பார்த்துக்கொள்ளுங்கள் என்று நான் நாட்டைப்பற்றி எடுத்துச் சொல்லுகின்றேன். யானைக்குக் கவுன் தைக்கக் கூடிய சாமர்த்தியமுள்ளவர்கள் தயவுசெய்து தைத்துக்கொள்ளட்டும். ஆனால் நான் பானையிலே சோறு இருக்கிறதா என்று பசியிலேயும் பட்டினியிலேயும் ஈடுபட்டிருக்கின்ற மக்களிடத்திலே சொல்லுகின்றபோது, "நீ பானையைப்பற்றிப் பேசினால் என்னுடைய யானை மிரண்டுவிடும் என்று சொன்னால், அது என்ன யானை உன்னிடத்திலே இருப்பது? நீ அகில இந்தியா என்று எடுத்துச் சொல்லுகின்றாயே, அந்த அகில இந்தியா, நான் இப்போது குறிப்பிடுகின்றேனே பழந் தமிழகம், நக்கீரன் வாழ்ந்த தமிழகம், கபிலர் இருந்த தமிழகம், பெரும் பெரும் புலவர்கள் இருந்த தமிழகம், அகமும் புறமும் பாடிய காலத்துத் தமிழகம், சிலப்பதிகாரமும் சீவக சிந்தாமணியும் இருந்த தமிழகம்—அந்தக்காலத்திலே அகில இந்தியா இருந்ததா?

நம்முடைய பழம் புராணங்களில் எங்காவது நீங்கள் இந்தியா என்று பார்க்கின்றீர்களா? தேவார திருவாசகங்களில் இருக்கின்றதா இந்தியா என்று? திருப்புகழ் காவடிச் சிந்திலாவது பார்க்கின்றீர்களா? இல்லையே! அங்கே நீங்கள் கேட்பதெல்லாம், சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு; அதற்கடுத்து பல்லவ நாடு கொங்கு நாடு, இப்படி நாடுகளைப் பற்றிக்கேள்விப்பட்டீர்களே தவிர, இமயம் முதற்கொண்டு குமரி வரையிலே இருக்கின்றது இந்தியா என்று ஒரு நாடு என்பதாக என்றைய தினம் நமக்குத் தெரிந்தது? இந்த நாட்டைச் சுரண்டுவதற்கு என்றைய தினம் வெள்ளைக்காரன் வந்தானோ, அவன் தன்னுடைய நிர்வாகச்சவுகரியத்துக்காக, டெல்லியிலே கோட்டை கட்டி, பம்பாயிலே இன்னொரு கோட்டை கட்டி, சென்னையிலே வேலூர் கோட்டை கட்டி, கோட்டைக்குக் கோட்டை, கொடிமரத்துக்குக் கொடி மரம், இரும்புச் சங்கிலி போட்டுக் கட்டினான். நீங்கள் ஏன் அந்த அடிமைச் சங்கிலிக்குள் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றீர்கள்? எதற்காக அந்த அடிமைச் சங்கிலியைப் பார்த்து இதுதான் அகில இந்தியா என்கிறீர்கள்? உண்மையிலே நான் உங்களிடத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்ளுவேன், திருமண வீட்டிலே கொடுக்கின்ற சந்தனமானாலும், உடலிலே பூசி, அது நன்றாக உலர்ந்து, கொஞ்சம் அரிப்பு எடுக்க ஆரம்பித்தால் வீட்டிலே வந்து கழுவுகிறோமே, அது சந்தனம்-மணமிருக்கின்றது, அன்போடு கொடுத்தார்கள். உபசாரத்திற்காகக் கொடுத்தார்கள். என்றாலும் பூசி உலர்ந்துவிட்டால் மறுபடியும் துடைத்துவிடுகின்றோமே. சந்தனத்தையே துடைக்கின்றோம் என்றால், வெள்ளைக்காரன் பூசிவைத்த அந்தச் சேற்றிலே இன்றையதினம் நின்றுகொண்டு "இது எவ்வளவு வாசனை தெரியுமா, இதிலேதான் எனக்குச் சமதர்ம மணம் கிடைக்கின்றது" என்று என்னுடைய கம்யூனிஸ்ட் நண்பர்கள் சொன்னால், நான் அவர்களுடைய நாசிக் குற்றத்தைப் பற்றிப் பரிதாபப்படுவதா, அல்லது அவர்களுக்குத் திடீரென்று சேற்றிலே தோன்றிவிட்ட காதலைப் பற்றிப் பச்சாதாபப்படுவதா!

பழந்தமிழ் நாடு எப்படி எல்லாம் வாழ்ந்திருந்தது. இன்றைய தமிழ் நாடு எந்த வகையிலே இருக்கின்றதென்றால், ஏழெட்டாண்டுக் காலத்திற்கு முன்னால், நம்முடைய நாட்டிலே நல்ல மழை இல்லாமல், பஞ்சம் ஏற்பட்டு, வீட்டுக்கு வீடு பட்டினி படை எடுத்து, அரிசி கிடைக்காமல் இருந்த காலத்தில், இங்கே இருக்கின்ற மக்கள் எல்லாரும், டெல்லியிலே இருக்கின்ற ஒரு மந்திரி—உணவு மந்திரி இன்றைய தினம் கவர்னராக இருக்கின்றார் — முன்ஷி என்பவரைப் பார்த்து "ஐயா பட்டினியாக இருக்கிறது" என்றார்கள். உடனே முன்ஷி திருப்பிக்கேட்டார் 'எதனாலே பட்டினி'? என்று. 'அரிசி கிடைக்கவில்லை ஆகையினாலே' என்றார்கள். 'அரிசி ஏன் கிடைக்கவில்லை' என்று கேட்டார் அந்த அரசியல் வித்தகர்," நெல் இல்லை ஆகையினாலே அரிசி இல்லை" என்றார்கள்.

"ஓ, மறந்துபோனேன், நெல் இல்லை அல்லவா? ஏன் நெல் இல்லை?" என்றார். "விளைச்சல் இல்லை" என்றார்கள். "விளைச்சல் ஏன் இல்லை?" "மழை இல்லை"

'ஓ, அப்படியானால் மரங்களை நடுங்கள். அது வானத்தை முட்டும். மேக மண்டலத்தைத் தாக்கும், மழை பொழியும், மழைக்குப் பிறகு பயிர் விளையும், அதற்குப் பிறகு நெல் கிடைக்கும், பிறகு அரிசி கிடைக்கும், சாப்பிடலாம்' என்றார்.

'ஐயா இந்தவித்தையைத்தான் நாங்கள் செய்துகொண்டிருந்தோம், அதற்குப் பிறகு விறகுக்

147 544.

காகக் காடுகளை அழித்துவிட்டார்கள். பட்டாளத்துக்காரர்கள் காட்டுக்குக் காடு டேரா அடித்து, காடுகளை எல்லாம் அழித்துவிட்டார்கள், அதனாலே இந்த அளவுக்கு எங்களுக்குத் தொல்லை வந்தது. இப்போது எங்களுக்குப் பசியைப் போக்கிக்கொள்ள அரிசி தேவை என்றார்கள். பதில் என்ன சொன்னார் முன்ஷி?

“அரிசி தருகிறேன்” என்றாரா? இல்லை. ‘ஏன் நீங்கள் அரிசியே வேண்டும் என்கிறீர்கள்?’ என்று கேட்டார். ‘இல்லை அதுதான் எங்களுக்குப் பழக்கம், சேரன் சோழன் காலத்திலே இருந்து இப்பொழுதுஇருக்கிற சின்னசாமி காலம் வரையில் நாங்கள் அரிசி சாப்பிட்டுத்தான் பழக்கம்’ என்றார்கள். ‘இல்லை இல்லை அரிசி வேண்டாம் உங்களுக்கு. பருத்திக் கொட்டை சாப்பிடுங்கள்’ என்றாரே!

‘பருத்திக் கொட்டை! எங்களையா சாப்பிடச்சொல்கிறீர்கள்?’ என்று கேட்டதற்கு, முன்ஷி திருப்பிச் சொன்னார்; “நீங்கள் என்ன பருத்திக்கொட்டையைச் சாதாரணமாகக் கருதுகின்றீர்களா? பருத்திக் கொட்டையை வைத்துத்தானே பசுவை வளர்க்கிறோம்? பருத்திக் கொட்டை தின்பதால்தானே பசு நல்ல மதுரமான பால் தருகின்றது? ஆகையினால் மக்களே காங்கிரஸ் ஆட்சியில் ஆளுக்கு ஒருபிடி பருத்திக் கொட்டைசாப்பிடுங்கள், பசுவைப் போல் நீங்கள் வளமாக இருப்பீர்கள்” என்று சொன்னவர் அல்லவா முன்ஷி?

“அகில இந்தியா அகில இந்தியா” என்று கருதிக்கொண்டு, ஒருபிடி பருத்திக் கொட்டை சாப்பிடுங்கள் என்று சொன்ன ஒரு ஆட்சியை எப்போதுமே நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்று கடமைப்பட்டிருந்தால், நீங்கள் கம்யூனிஸ்டுகளாக இருங்கள், நீங்கள் சோஷியலிஸ்டுகள் என்று பெருமைபேசிக்கொள்ளுங்கள். ‘அண்ணாத்துரை சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் பிற்போக்கானது’ என்று சொல்லுங்கள். அதைப்பற்றி எல்லாம் நான் உங்களிடத்திலே வாதாடவில்லை, சண்டைக்கு வரவில்லை, கோபம்கூடக்கொள்ளவில்லை. நீங்கள் அறியாமல் சொல்லுகின்றீர்கள்; காலம் உங்களுக்குப் பாடம் புகட்டும். ஆகையினால் அதற்கு பதில் கூடச் சொல்லமாட்டேன். ஆனால் ஒருபிடி பருத்திக் கொட்டை சாப்பிடுங்கள் என்று சொன்ன ஒரு மந்திரியினுடைய ஆட்சியை மறுபடியும் ஏன் வரவேற்கிறீர்கள்?

நான் படித்த பிரஞ்சுப் புரட்சியின் வரலாற்றில், பௌலான் என்ற ஒரு கவர்னர். பசியாலும் பட்டினியாலும் தாக்கப்பட்ட மக்கள் அவனுடைய மாளிகையை நோக்கிப் படையெடுத்தார்கள். உள்ளே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான் பௌலான். நல்ல ஆட்டு இறைச்சியையும் அதைவிட உருசி தருகின்றவேறு பறவைகளின் இறைச்சியையும், கடித்துக் கடித்துத்தின்றுகொண்டிருந்தான். ‘ஐயா பசி, ஐயா பசி’ என்று கதறினார்கள். உடனே வெளியில் எழுந்து வந்தான். கூச்சல் போட்டுக்கொண்டிருந்த மக்களைப் பார்த்து ‘ஏன் இந்தக் கூச்சல்?’ என்று கேட்டான். ‘பசி ஆகையினாலே கூவுகின்றோம்’ என்று அவர்கள் சொன்னார்கள். பசித்தால் என்ன? போய்எதையாவதுசாப்பிடுங்கள் என்றான், ‘ஐயா எங்களுக்கு ரொட்டி கிடைக்கவில்லை, ரொட்டி தட்டுவதற்கு கோதுமை கிடைக்கவில்லை’ என்று அந்தப் பஞ்சத்தால் அடிபட்ட மக்கள் கதறினார்கள், பதறினார்கள். உடனே ஆணவம்பிடித்த பௌலான் சொன்னான்; அங்கே பக்கத்திலே இருந்த வைக்கோலைக் கையிலே எடுத்து, ‘எதுவும் கிடைக்காவிட்டால் இதோ இந்த வைக்கோலைத் தின்னுங்கள்’ என்று எதிரிலே போட்டுவிட்டு உள்ளே போனான்.

அதற்குப் பிறகு பிரான்சு நாட்டிலே புரட்சி நடந்தது. புரட்சி என்ற உடன், பட்டாளத்தில் இருந்தவர்கள் எல்லாம், புரட்சியிலே சேர்ந்தார்கள், மாடுதின்னும் வைக்கோலை மனிதனைத் தின்னச்சொன்னான் அல்லவா மமதையாளன்! பௌலான். அவன் ஒளிந்திருக்கின்ற மாளிகைக்குள்ளேபோய் அவனைக் கரகர எனப்பிடித்து இழுத்துவந்து தூக்குமேடைக்கு அழைத்துச் சென்றார்கள். வெட்டுப்பாறையின் மீது அவனை உட்காரவைத்து, தலையைச் சாய்த்து, வெட்டப் போகிற நேரத்தில், கூட்டத்தின் நடுவிலிருந்து ஒருவன் கதறினான் “வெட்டாதீர்கள் வெட்டாதீர்கள்” என்று. உடனே அந்த மக்கள் கேட்டார்கள், ‘வெட்டாதே என்று இவனைப்பற்றியா சொல்லுகின்றாய்? இவன் எவ்வளவு அக்ரமக்காரன் தெரியுமா? மனிதர்களைப் பார்த்துப் புல் தின்னச்சொன்னான். வைக்கோல் தின்னச்சொன்னான், அப்படிப்பட்ட மாபாவியாயிற்றே, இவனை வெட்டாமல் விடலாமா?’ என்று. ‘ஒரு கணம் பொறுங்கள் என்றான் அவன். கொல்லிவிட்டு வேகமாக வெளியிலே ஓடினான். எங்கோ கிடந்த கொஞ்சம் வைக்கோலைக் கொண்டு வந்தான், பௌலானுடைய தலைமயிரைப் பிடித்தான், தூக்கினான்: வாயைத் திறந்தபோது அந்த வைக்கோலைத் திணித்து “இப்போது வெட்டுங்கள்” என்றான். வெட்டினார்கள்.

முன்ஷியை நாம் அப்படி எல்லாம் செய்யமாட்டோம், ஏன் என்றால், நாமெல்லாம் பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். பலாத்காரத்திலே நம்பிக்கை வைத்திருந்த மக்கள் அப்படி எல்லாம் வெட்டுப் பாறையில் வைத்து, நாட்டு மக்களை அவமதித்தவனை வெட்டித் தள்ளினார்கள். ஆனால் இந்த நாட்டிலே, ஆணவத்தையாவது நீங்கள் வெட்ட வேண்டாமா? அதிகார ஆதிக்கத்தையாவது வெட்ட வேண்டாமா? காங்கிரஸ் சர்வாதிகாரத்தையாவது வீழ்த்த வேண்டாமா? ஜனநாயகத்தையாவது உண்டாக்க வேண்டாமா? இல்லையானால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை எதற்காக நமக்குத தேர்தல்? ஐந்தாண்டுக்கு ஒருமுறை தேர்தல் வைப்பதனுடைய கருத்து என்ன? ஆடையிலே எப்படி நாளாக நாளாக அழுக்கு ஏறுமோ, அதைப்போல், அரசியலில் எந்தக் கட்சி அமர்ந்தாலும், நாளாக நாளாகக் கறை ஏறும். ஏறுகின்ற கறையை நாட்டு மக்கள் துடைத்து நீக்க வேண்டும். நீக்குவதற்குத்தானே உங்களிடத்தில் கொணடு வருகின்றார்கள்? வெளுப்பதற்கு உங்களிடத்திலே போடுகின்ற ஆடையைப் பார்த்து. எங்கெங்கே கறை இருக்கிறது என்று கண்டுபிடித்து, எத்தகைய சவுக்காரம் போட்டால்போகும் என்று கண்டுபிடித்து, தோய்த்து எடுத்து மடித்தால்தான் உங்களுக்குஆட்சியிலே புதுமை கிடைக்குமே தவிர,



பழைய கந்தையே எங்களுக்குப் போதும் என்று சொன்னால் நாட்டிலே எப்படிப் புதுமை கிடைக்கும்? கிடைத்த சோப்பு சன்லைட் சோப்போ, 501 ஓ, ஏதோ ஒரு சோப்பு, இதை வைத்து நீங்கள் வெளுத்துக்காட்டுங்கள் என்று சொல்லுகின்றார் என்றுதான் பொருள். உபயோகித்துப் பாருங்களேன்! தமிழ்நாட்டு மக்கள் என்னை **20**-வருஷமாகப் பயன்படுத்தினார்கள். காஞ்சிபுரத்து மக்கள் ஒரு 5-வருஷத்திற்கு உபயோகிக்கக்கூடாதா? தமிழ்நாட்டு மக்கள், நானும் நான் சார்ந்திருக்கின்ற கட்சியும் எதை எதை வெளுத்துவிடுவோமோ என்று பயந்து ‘அப்பா நீ எதை வேண்டுமானாலும் வெளுத்துவிடு; வைகுந்தம்வரையிலே போகாதே, கைலாயம் வரையிலே போகாதே’ என்று தானே சொன்னார்கள்? இப்பொழுதுகூட டாக்டர் சீனுவாசன் அதைத்தானே சொல்லுகின்றாராம். “ஆஸ்திகத்து ஓட்டா நாஸ்திகத்துக்கு ஓட்டா?” என்று.

அவர் ஏதோ ஆறு ஏழு கோயில்கள் கட்டியவரைப்போலவும்நான்பத்துப்பதினொருகோயில்களை ... இடித்தவனைப்போலவும், அவர் ஏதோ காலையில் எழுந்த உடன் பட்டை பட்டையாக விபூதி பூசுகின்றவரைப்போலவும், என்னுடைய வீட்டில் பிள்ளையார் மாடமே இல்லாததைப்போலவும், அவர் ஏதோ கந்தர் அநுபூதியைப்படித்தவர்போலவும்,எனக்கு அது ஏதும் தெரியாததைப் போலவும்; எனக்காவது நல்ல தமிழ் தெரியும் — புராணம் தெரியும், அவருக்கு என்ன தமிழ் தெரியும்? தமிழ் தெரிந்தால் தானே புராணம் தெரியும்? தமிழ் தெரிந்தால்தானே தேவார திருவாசகம் தெரியும்? இதைக்கூட அறியாமல் இருக்கின்ற அவர் தேர்தல் காலத்திலே வந்து ஆஸ்திகத்திற்கு ஓட்டா, நாஸ்திகத்திற்கு ஓட்டா? — என்று கேட்கிறார். அதற்கப்புறம் ஆஸ்திகம் தான் என்று சொன்னால், சைவத்துக்கு ஓட்டா வைணவத்துக்கு ஓட்டா என்பார். இல்லை ஐயா வைணவத்துக்குத்தான் ஓட்டு என்றால், வடகலைக்கு ஓட்டா தென்கலைக்கு ஓட்டா என்று கேட்பார். வடகலைக்குத்தான் என்றால் பட்டையாகப் போடுகிற வடகலைக்கா, மெல்லிசாகப் போடுகிற வடகலைக்கா என்பார்; இப்படிப் பட்ட அரசியல் எங்கேகொண்டு போய் நிறுத்தும்?

அதுவா அரசியலில் இன்றைய தினம் பிரச்சினை? காங்கிரசினுடைய சர்வாதிகாரம் நீடிக்க வேண்டுமா, சரியவேண்டுமா அதுதான் உங்கள் முன்னாலே இருக்கிற பிரச்சினை. அந்தக் காங்கிரஸ்கட்சி சிங்கம் புலி கரடிபோல் சட்ட சபைக்கு வந்தாலும், நான் ஒருவன் போனாலும் போதும் சர்க்கசைப்போல ஆட்டிவைப்பேன் என்று திரு. தங்கவேலர் அவர்கள் உண்மையிலேயே என்னிடத்திலே இருக்கிற ஆசையினாலே சொன்னார்கள். நான் சிங்கம் புலி கரடியை அடக்கக்கூடிய அளவுக்குத் திறமை படைத்தவன் அல்ல. ஆனால் காங்கிரசிலே உள்ளவர்கள், சிங்கமுமல்ல, புலியுமல்ல. ஏன் என்றால் இன்றைய தினம் வந்த “தினமணி” பத்திரிகையை நீங்கள் பார்த்தால், காமராஜரை இன்றைய தினம் ஆதரித்துக் கொண்டிருக்கும் பெரியார் இராமசாமி என்ன சொல்லுகிறார் என்பது தெரியும், பத்திரிகையைப் படித்துக் காட்டுகின்றேன்,

> “காங்கிரஸ் சீர்குலைந்து கொண்டிருக்கிறது, ஏற்கனவே காங்கிரஸ் கழுதை மாதிரி இருந்தது. போன தேர்தலில் அது பன்றியாயிற்று. இந்தத் தேர்தலுக்குப் பிறகு அது கட்டெறும்பாகி மறைந்துவிடும்”

இது காமராஜரை ஆதரிக்கின்ற பெரியாரின் பேச்சு!

பலபேர் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள், பெரியாருக்கும் எனக்கும் ஏதோ பகை வந்துவிட்டது. ஆகையினால் நடுவிலே புகுந்துவிடலாம் என்று காங்கிரஸ்காரர்கள் மனப்பால் குடிக்கின்றார்கள். நாங்கள் இரண்டு பேரும் எப்போது சந்திக்கின்றோம் என்று காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது.

நான் சொல்லுவதிலிருந்து சந்தித்துப் பேசுகின்றோம் என்று அர்த்தமல்ல. இதுதான் சந்தித்துப் பேசுவது!

காங்கிரசைப்பற்றி அவர் கொண்டிருக்கின்ற கருத்து, அது கழுதை, அது பன்றி, அது கட்டெறும்பு என்பது. அவருக்கு ஏற்பட்டிருக்கின்ற அரசியல் அநுபவமும், பொது வாழ்க்கையில் அவருக்குக் கிடைத்திருக்கின்ற பெரும்பேறும் எனக்குக் கிடைக்காத காரணத்தினால், நான் அவ்வளவு கடுமையான வார்த்தைகள் உபயோகப்படுத்தாமல் காங்கிரஸ் சர்வாதிகாரம் செய்கிறது என்கிறேன்.

என்றால் சிங்கம் புலி கரடியை அடக்குவதற்கு முடிகிறதோ இல்லையோ, கட்டெறும்பு என்பது பெரியார் இராமசாமியின் அகராதிப்படி உண்மையானால், நீங்கள் என்னைச் சட்ட சபைக்கு அனுப்பினால் காலாலேயே தேய்த்துவிடுவேன். ஏன் முடியாது? என்னுடைய காலுக்கு அந்த வலிவு கூடவா இல்லை? ஆகையினாலே காங்கிரஸ் ஏதோ மகத்தான முறையிலே இருக்கிறது என்று, நீங்கள் யாரும் தப்புக் கணக்குப் போடத் தேவை இல்லை. அது சீர்குலைந்து கொண்டே வருகின்றது. நாள் தவறாமல் நீங்கள் காங்கிரஸ் பத்திரிகைகளைப் பார்த்தால், இன்னின்னவர் விலகினார் இன்னின்னவர் விலகினார் என்ற பட்டியலைத்தான் பார்க்கமுடியும். பத்து வருஷத்துக்கு முன்னாலே நீங்கள் பார்த்தால் இன்னின்னவர் சேர்ந்தார்கள் என்று பட்டியல் இருக்கும். ஆறுமுகம் காங்கிரசில் சேர்ந்தார், அம்பலவாணர் காங்கிரசில் சேர்ந்தார், என்று இப்படி இருக்கும். இன்றைய தினம் வருவது அம்பலவாணரை நிற்கச் சொன்னார்கள் காங்கிரஸ் டிக்கட்டில்; அவர் அடுத்த தபாலிலே கடிதம் எழுதி ‘எனக்கு வேண்டாம்’ என்றார். உடனே காமராஜர் அவருடையவீட்டிற்குப் போய், ‘என்ன அம்பலவாணரே ஏன் டிக்கட் வேண்டாம் என்றீர்கள்?’ என்று கேட்டால், நம்முடைய திரு. தங்கவேலர் சொன்னதைப்போல ‘ஐயா, உம்முடைய டிக்கட் செல்லாத டிக்கட், அது வேண்டாம், நான் வேறு டிக்கட் போட்டுக்கொள்கின்றேன்’ என்று அம்பலவாணர் சொல்லிவிட்டார் என்று இன்றைய தினம் பத்திரிகையில் வருகிறது. என்ன அதற்குப் பொருள்?

கட்டிய கணவன் ஆனாலும் அவனுக்குக் கருத்துக்கெட்டு, மூளை குழம்பிப்போய், வெறி பிடித்தவனாக இருந்தால், சொந்த

மனைவிகூட அவன் கொஞ்சுவதற்கு அழைத்தால் பக்கத்து வீடு எதிர்வீட்டுக்கு ஓடி ஒளிந்து கொள்ளுவாளே தவிர, என்னைத் தொட்டுத் தாலி கட்டியவன் தானே, ஆசையோடு தானே அழைக்கின்றான், எவ்வளவு இன்பமாக முன்னாலெல்லாம் இருந்தோம், மறுபடியும் அப்படித்தான் இருப்போமே என்று எந்த மனைவியும் போகமாட்டாள். "ஐயோ பைத்தியத்தில் இது ஒரு ரகம் போல இருக்கிறது, பார்வதி ஓடிவா, ஏகாம்பரம் இங்கே வா, கந்தப்பா கதவைத் தாள் போடு" என்று சொல்லிவிட்டு வெளியே போவாளே தவிர, பித்தம் பிடித்த கணவனிடத்திலே எந்த மனைவியும் சரசமாட மாட்டாள்.

இன்றைய தினம் காங்கிரசை விட்டுப் பலபேர் போகிறார்கள் என்றால், என்ன அர்த்தம் அதற்கு? தொட்டுத் தாலி கட்டிய கணவன் என்றாலும், அவனுக்குக் கொஞ்சம் மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டது என்று பயந்து ஓடுகின்ற மனைவியைப் போல், வி. கே. இராமசாமி முதலியார் ஓடுகிறார், ஜெயராம ரெட்டியார் ஓடிவிட்டார், வெங்கிடகிருஷ்ண ரெட்டியார் ஓடினார், இப்படி நாள் தவறாமல் பல பேர் ஓடினார்கள்.

ஓடுகின்றார்கள் ஓடுகின்றார்கள் என்றால், போய் சும்மாவும் இல்லை. எப்படி ஒரு பைத்தியக்காரனுடையபிடியிலே இருந்து தப்பித்துக்கொண்டு வந்தால், தொலைவிலே இருந்துகொண்டு, அவன் மற்றவர்கள் மேலே பாயாமல் இருப்பதற்குப் பைத்தியக்காரனைக் கல்லாலே அடிப்பார்களோ, அப்படி ஜெயராம ரெட்டியாரும், வெங்கிட கிருஷ்ண ரெட்டியாரும், வி. கே. இராமசாமி முதலியாரும் மற்றவர்களும் அந்தப் பிடியிலே இருந்து தப்பித்துக்கொண்டு வெளியிலே வந்து கல்லை எடுத்து அந்தப் பைத்தியத்தை அடிப்பது போல் அந்தக் காங்கிரசையே எதிர்க்கிறார்கள்.

இந்த வகையிலே சீர்குலைந்து கொண்டு வருகிற காங்கிரஸ் கட்சியை நீங்கள் மறுபடியும் மறுபடியும் பீடத்திலே அமர்த்தினால் எப்படி நமக்கு நியாயம்கிடைக்கும்? எங்கிருந்து நமக்கு நீதி கிடைக்கும்? அப்படியானால் காங்கிரஸ் கட்சியினிடத்திலே இருக்கிற அதிகாரம் சாதாரணமானதா என்றால், டெல்லியிலே அவர்கள் ஆட்சி நடத்துகின்ற வரையில், டெல்லிக்கும் சென்னைக்கும் சங்கிலி இருக்கிற வரையில், அவர்களிடத்திலே குவிந்திருக்கிற அதிகாரம்அமோகமானது. நமக்கு இருக்கின்ற சர்க்கார் ஒன்றல்ல, இரண்டு சர்க்கார் நம்மை ஆளுகின்றது. அதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஒன்று படே சர்க்கார், பெரிய சர்க்கார் டெல்லியிலே இருப்பது. மற்றொன்று சோட்டே சர்க்கார்; சின்ன சர்க்கார், சென்னையிலே இருப்பது. சென்னையிலே இருக்கிற சர்க்காருக்குத் தலைவர் காமராஜர், டெல்லியிலே இருக்கிற சர்க்காருக்குத் தலைவர் ஜவகர்லால் நேரு.

காமராஜர் சர்க்காருக்கு இருக்கிற வேலை நம்முடைய அடிமடியிலே கையைப்போட்டு வரியை வாங்குவது. டெல்லியிலே இருக்கிற சர்க்காருக்கு வேலை காமராஜர் கையைத் தட்டிப் பறித்து அந்தப் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு போவது. இப்படி, சென்னையும், பம்பாயும்,ஒரிசாவும், வங்காளமும், மற்றும் இருக்கின்ற மாகாணங்கள் எல்லாம் சேர்ந்து, ஆண்டு ஒன்றுக்கு டெல்லிக்குக் கொட்டி அழுகின்ற பணம் 400-கோடி ரூபாய். இந்த 400-கோடி ரூபாய் பணத்தில் 208-கோடி ரூபாய் பட்டாளத்திற்குச் செலவிடுகின்றார்கள், மேலே உட்கார்ந்துகொண்டிருக்கின்ற டெல்லியின் புதிய பாதுஷாக்கள்.

ஆண்டு ஒன்றுக்கு 208-கோடி ரூபாய் செலவழிக்கின்ற இவர்கள், ஆப்கனிஸ்தானத்தைப் பிடித்தார்களா? பாரசீகத்தின் பேரிலே படை எடுத்தார்களா? பர்மா நம்முடைய காலைத்தொட்டுக் கும்பிடுகின்றதா? எந்த நாட்டைப் புதிதாகப்பிடித்தார்கள் என்றால்,காஷ்மீர் நாட்டை ஒன்றரை வருஷம் சண்டைபோட்டு,பாதியைப் பிடித்தார்கள், பாதி பாகிஸ்தானிடம் இருக்கிறது என்று அவர்களே வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்ளுகின்றார்கள்.

208-கோடி ரூபாய் பட்டாளத்திற்குச் செலவழிப்பானேன்? பட்டாளத்திற்குச் செலவழிக்கின்ற அந்தப் பணத்தைப் பாதைகள் போடுவதற்குச் செலவழித்தால், —நேற்றைய தினம் சென்றிருந்தோம் மோட்டூர் என்ற ஒரு கிராமத்திற்கு; அந்த மோட்டூர் என்ற கிராமத்திற்கும் பக்கத்தில் இருக்கிற ஒழலூர் என்ற கிராமத்திற்கும் ஒரு பாதை இல்லை. 'எப்படி ஐயா ஒழலூருக்குப் போவீர்கள்?' என்று கேட்டால், மோட்டூரிலே உள்ளவர்கள் சொன்னார்கள், கழுத்தளவு தண்ணீரிலே இறங்கித்தான் நாங்கள் போகவேண்டும் என்று. எவ்வளவு பரிதாபகரமான நிலைமை?

நான் உங்களிடத்திலே பழைய தமிழகத்தைச் சொன்னேன். இங்கிருந்து பாய் மரக்கப்பலிலே, முத்து, பவழம், சந்தனம், அகில், பட்டுப் பட்டாடை இவைகளை ஏற்றிக்கொண்டு போன அந்தத் தமிழன், எங்கே? கழுத்தளவு தண்ணீரிலே இறங்கி நடந்தால்தான் மோட்டூரிலே இருந்து ஒழலூருக்குப் போகமுடியும் என்றிருக்கின்ற இன்றைய தமிழன் எங்கே?


## வாழ்க்கை ஒப்பந்த அறிவிப்பு

அன்புடையீர்,

நாளது (10—2—57) ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை வண்ணாரப்பேட்டை மணிகண்ட முதலி 3-வது தெரு, 4-என் இல்லத்தில், சி. என். அண்ணாதுரை அவர்கள் எங்கள் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சியை நடத்திவைப்பார்கள் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

V. A. சுப்பிரமணியம், B. Sc., B. Form.
மீனாம்பாள்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்:—

THE DRUG HOUSE, MADRAS.




208-கோடி ரூபாயைப் பட்டாளத்திற்குச் செலவழித்துவிட்டால் பாதைபோடுவதற்குப் பணம் எங்கே? கல்லூரி கட்டுவதற்குக் காசு ஏது? சட்டியிலே இருந்தால் அல்லவா அகப்பையிலே வரும் என்பதைப்போல், மாகரைத்து வைத்திருக்கின்ற சட்டியிலே இருந்து வேறு யாருக்காவது மாவைக் கொடுத்துவிட்டால், மாப்பிள்ளைக்குப் பணியாரம் சுடவேண்டுமானால் மா, எங்கிருந்து கிடைக்கும்? திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கின்றது பணத்தை டெல்லிக்கு அனுப்பாதே என்று.

வேண்டுமானால் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கொடுக்காதே — வேண்டாம். காங்கிரஸ் காரரிடத்திலேயே கொடு, கம்யூனிஸ்ட்காரர்களுக்கு அதிகமான அரிப்பு இருக்கிறதா, அவர்களிடத்திலே கொடு. சோஷியலிஸ்டுகளிடத்திலே கொடு. சைவ சித்தாந்த சமாஜத்திலே கொடு. எங்குவேண்டுமானாலும் கொடு. டெல்லியிலே கொடுத்துவிட்டுப் பிறகு காவடி தூக்காதே. டெல்லியிலே கொடுத்துவிட்டு நம்முடைய நாட்டுமக்களைப் பஞ்சத்திலும் பட்டினியிலும் போடாதே என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. இது தேசியத்தை எந்த வகையிலே குத்துகிறது? குடைகிறது?

இதனால் கம்யூனிஸ்ட் நண்பர்களுக்குக் கோபம் வருவானேன். மக்களுக்குஇதுபிடிக்கின்றதுஎன்பதாலே கோபம் வருகிறதே தவிர, வேறு எதனாலே கோபம் வருகின்றது?

ஒரு பக்கத்திலே சுந்தராம்பாள் பாட்டு நடக்கின்றபோது தெருக்கோடி பஜனைக்கோயிலிலே உட்கார்ந்து ஒடிந்துபோன தாளத்தை வைத்துக்கொண்டு, பிய்ந்து போன மிருதங்கத்தைத் தட்டிக்கொண்டு கட்டிப்போன தொண்டையிலே பாடுகின்றவன், "யாரைய்யா இப்படி ஏதோ கத்திக்கொண்டிருக்கின்றார்கள், நம்ம பஜனை கெட்டுவிடுகின்றதே" என்றுதான் சொல்லுவான்.

சுந்தராம்பாள் பாட்டுக்கும் இவனுடைய ஓட்டை மிருதங்கத்திற்கும் ஒடிந்துபோன தாளத்திற்கும் என்ன சம்பந்தம்?

**நாட்டு மக்களுக்கு என்னுடைய பாஷை புரிந்துவிட்டது. நாட்டு மக்களுக்கு திராவிடநாடு என்பதிலே வேட்கை பிறந்துவிட்டது. அதை இனி யாராலும் அணைக்க முடியாது.**

நாட்டு மக்கள் அந்தப் பகுதியிலே திரும்புகின்றார்கள் என்ற உடனே, கை தட்டி, கம்யூனிஸ்டுகள் "அங்கே போகாதே அது ஆபத்தான பாதை, என் பின்னோடு வா, என் பின்னோடு வா" என்று அழைக்கின்றார்கள். எங்கே ஐயா? என்று கேட்டால் டெல்லி வரையிலே போகலாம் என்கிறார்கள்.

நான் தமிழ்நாட்டு மக்களை, கொல்லிமலையைப் பாருங்கள், குடகு மலையைப் பாருங்கள், கொச்சி மலையைப் பாருங்கள், பாலாற்றைப் பாருங்கள், காவேரியைப் பாருங்கள், வைகையைப் பாருங்கள், தாமிரபரணியைப் பாருங்கள் என்கிறேன். காங்கிரஸ் காரர்களோ தேவலோகத்திலே ஓடுகின்ற, ஆற்றைப் பாருங்கள் என்கிறார்கள். கம்யூனிஸ்டுகளோ கங்கைக்கரைக்கே வா என்று அழைக்கின்றார்கள். காலிலே வலிவு இருக்கின்றதா? கருத்து அதற்கு இடம் தருமா?

ஆகையினால்தான் பழந்தமிழகம் எப்படி டெல்லியின் பிடிக்குக் கட்டுப்படாமல், எந்த ஆதிக்கத்திற்கும் உட்படாமல், யாரையும் ஆதிக்கத்திற்குக் கொண்டுவராமல், மற்றவர்களை மதித்து, மற்றவர்களாலே மதிக்கப்பட்டு, மற்றவர்களை நண்பர்களாகப் பெற்று, மற்றவர்களுக்கு அறிவை ஊட்டி, மற்றவர்களிடமிருந்து அறிவைப் பெற்றுக்கொண்டு, மற்றவர்களிடத்திலே வியாபாரம் நடத்தி, மற்றவர்கள் இங்குவந்து வியாபாரம் நடத்த இடம் கொடுத்து, எப்படி உரிமைமிக்க நாடாக வாழ்ந்ததோ, அதைப்போல வாழ்வதற்கு வழி இருக்கிறது, வகை இருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது.

இதை எடுத்துச் சொல்வதற்கு ஏற்ற இடங்கள் டெல்லி சட்டசபையும், சென்னை சட்டசபையும்.

காங்கிரசானாலும், கம்யூனிஸ்ட் ஆனாலும், சோஷியலிஸ்ட் ஆனாலும் வடநாடு தென்னாடு என்று பேசமுடியாது. வடநாடு தென்னாடு என்று பேசுவதால் எங்களுக்கேதாவதுஇலாபமா? அதையும் நீங்கள் எண்ணிப்பாருங்கள்.

கம்யூனிஸ்ட் நண்பர்கள் பேசுகின்றனர் "நாங்கள் அல்லவா நெசவாளர்களுக்கு நண்பர்கள்" என்று.

நெசவாளர்கள் பட்டினி கிடந்த நேரத்தில், தொட்டிலிலே தூங்கிக்கொண்டிருந்த குழந்தை தாயினுடைய மார்பகத்திலே பால் இல்லாத காரணத்தினாலே, மார்பு விம்மிச் சாகின்றநிலையிலே இருக்கின்ற குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்துக்கொண்டு, கணவன் எங்கே எங்கே என்று அந்தத் தாய் தேடிக்கொண்டு தெருக்கோடியிலே போய், 'புளிய மரத்திலே தூக்குப்போட்டுக்கொண்டு தொங்குகின்றவன் உன் கணவனைப் பார்' என்று பிறர் சொல்லக் கேட்டு, அங்கே போய்ப் பார்த்து அழுதுகொண்டிருந்தார்களே, அந்தக்காலத்திலே கம்யூனிஸ்ட்டுகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? அந்தக் காலத்திலே கைத்தறி நெசவாளர்களுக்குச் சாதகமாக எந்தக் காரியத்திலே ஈடுபட்டிருந்தார்கள்? தத்துவம் பேசுகின்றார்கள்; அறிகின்றேன். சந்தா வசூலிக்கின்றார்கள்; கணக்கும் தெரியும், கைத்தறி நெசவாளர்கள் பட்டினி கிடந்த நேரத்தில் அவனுடைய நூலுக்கும் சேலைக்கும், வேட்டிக்கும் கிராக்கி இல்லாதிருந்த நேரத்தில் மலைமலையாகக் கைத்தறிஆடைகள் தேங்கி நின்ற காலத்தில் நாங்கள் அல்லவா தோளின் மேலே மூட்டையைப் போட்டுக்கொண்டு திரிந்தோம். திருச்சியிலும் தஞ்சையிலும், பிற இடங்களிலும். அழகேசன் கூட போன கூட்டத்திலே சொன்னாராம், 'என்ன அண்ணாத்துரை 51 ரூபாய்க்கு விற்றுவிட்டால் கலி தீர்ந்துவிட்டதா?' என்று. அண்ணாத்துரையாவது 51 ரூபாய்க்கு விற்றான். அழகேசன் எவ்வளவுக்கு விற்றார்? கம்யூனிஸ்ட்டுகள் எந்த அளவுக்கு விற்றார்கள்?

நெசவுத் தொழில் வளமாக இருக்கின்ற நேரத்திலே வருவார்கள். ஆனால் அவனுடைய நெற்றி வியர்வையும், அவனுடைய கண்ணீரும் ஒன்றாகக் கலந்து கீழே

147 544.

விழுந்ததே, அந்த நேரத்திலே எங்கே போய் இருந்தார்கள்?

நான் திருச்சியிலே விற்றபோது கம்யூனிஸ்ட் நண்பர் இராமமூர்த்தி தஞ்சையிலே விற்றிருக்கலாம் அல்லவா? ஜீவானந்தம் சென்னையிலே விற்றிருக்கலாம் அல்லவா?

கருணாநிதி நாகபட்டணத்தில் விற்றுக்கொண்டிருந்த நேரத்தில் மாயாண்டி பாரதி மதுரையிலே விற்றிருக்கலாம் அல்லவா? உங்களுடைய தோள்கம்யூனிஸ்ட்கட்சிக் கொடியைமட்டும்தானா ஏந்தவேண்டிய தோள்? எங்களுடைய கண்களுக்கு மட்டும்தானா கைத்தறி நெசவாளர்களுடைய துயரம் தெரியவேண்டும்? உங்களுடைய கண்களுக்கு இது எதுவும் தெரியாமல், அகில இந்தியா மட்டும் தானா தெரியவேண்டும்?

என்ன கண் ஐயா அப்படிப்பட்ட கண்? என்ன தோள் ஐயா அப்படிப்பட்ட தோள்? எந்த வாயினாலே இன்றைய தினம் சொல்லுகின்றீர்கள் அண்ணாத்துரைக்கும் நெசவாளருக்கும் என்ன சம்பந்தம் என்று?

அண்ணாத்துரைக்கும் நெசவாளருக்கும் என்ன சம்பந்தம் என்பது மாத்திரமல்ல, அண்ணாத்துரைக்கும் நெசவாளிக்கும் இருக்கும் சம்பந்தத்தின் அளவுக்கு நெசவாளிக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் எப்பொழுது சம்பந்தம் இருந்தது?

பத்து வருஷத்துக்கு முன்னாலே என்று கருதுகின்றேன். கைத்தறி நெசவாளர்கள் லுங்கிகளை நெய்து மலைமலையாகக் குவித்து வைத்துக்கொண்டிருந்தார்கள். நம்முடையஊரிலேமௌலானாகம்பனி ஒன்று புதிதாக ஆரம்பித்த நேரம். இப்போது காங்கிரசிலே இருக்கிறார் அல்லவா, நமது நகரப் பிரமுகர் செங்கல்வராய நாயுடு அவர்கள்; என்னிடத்திலே தானே வந்தார்?

"அண்ணாத்துரை! லுங்கி எல்லாம் தேங்கிவிட்டது, பர்மாவுக்கு அனுப்பமாட்டேன் என்கிறார்கள், சிலோனுக்கு அனுப்பமாட்டேன் என்கிறார்கள், வா கூட்டம் போடலாம், மாநாடு நடத்தலாம்" என்றார்.

பெரிய காஞ்சிபுரம் வட்டாரத்திலே பெரிய மாநாடு போட்டோம். நெசவாளர்களை எல்லாம் ஒன்று கத் திரட்டினோம், அதற்கேற்ற வசதி கிடைத்தது. லுங்கிகள் எல்லாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி ஆயின. நெசவாளர் துயரம் துடைக்கப்பட்டது.

அப்போது எங்கே போயிருந்தார்கள் கம்யூனிஸ்டுகள்? அப்போது என்ன செய்துகொண்டிருந்தார் டாக்டர் சீனுவாசன்? 'லுங்கி என்றால் என்ன?' என்று கேட்டிருப்பார் டாக்டர் சீனுவாசன். அவருக்கு என்ன தெரியும் லுங்கி என்றால்! கம்யூனிஸ்டுகள் சொல்லி இருப்பார்கள் 'லுங்கிக்கு ஏற்பட்டால் போதுமா? பட்டு ஜவுளிக்கு இருக்கிறது' என்று இதிலே இருந்து இன்னொரு பக்கம் தாவி இருப்பார்கள்.

யார் அன்றைய தினம் வந்தவர்கள்? தங்கவேலர் அன்றைய தினம் தேவைப்பட்டது. அண்ணாத்துரை அன்றைய தினம் அழைக்கப்பட்டான். அழைத்துக்கொண்டு போன செங்கல்வராய நாயுடு எங்களை இங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, 'நான் இன்னொரு மார்க்கெட்டுக்குப் போய்வருகிறேன்' என்று காங்கிரஸ் மார்க்கெட்டுக்குப் போயிருக்கிறாரே தவிர, நெசவாளிக்கும் நம்முடைய கழகத்துக்கும் இருப்பதைப்போன்ற தொடர்பு, வேறு எந்தக் கட்சிக்கு உண்டு?

ஆகையினாலே நெசவாளத் தோழர்களே, உங்களுக்கு எந்தக் கட்சி நட்புக் கட்சி, என்பதைப் பற்றி நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

எந்தக் கட்சியும் இல்லை என்றே வைத்துக் கொள்ளுங்கள்......... நமக்கு இருப்பதெல்லாம் வேலும் மயிலும் துணை, நூலும் தாரும் துணை, அவ்வளவுதான், என்று நீங்கள் தீர்மானிப்பதானாலும் சரி. நெசவாளிக்கு உள்ள கஷ்டம் நிரந்தரமாகப் போகவேண்டுமானால் அதற்கு என்ன வழி? நெசவாளி நெய்து குவித்துக்கொண்டே இருக்கின்ற நேரத்தில் வடநாட்டிலே இருந்து ஆலை ஜவுளிகள் இறங்கிக்கொண்டே இருந்தால், என்றைய தினமும் நெசவாளியினுடைய குறை தீராது. மழை பெய்துகொண்டேஇருக்கும்போது கூரையை மாற்றிக் கொண்டே இருந்தால் என்ன பயன்? குடையிலே ஓட்டை இருந்தால், மழைக்கு அதைப் பிடித்துக் கொண்டேபோனால் என்ன பயன்? அதைப்போல வடநாட்டு ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஜவுளி தினிசுகள், ஆமதாபாத், கான்பூர், ஷோலாப்பூர், இப்படிப்பட்ட இடங்களில் நெய்யப்படுகின்ற வேட்டிகளும் சேலைகளும், தமிழ்நாட்டு மார்க்கெட்டில் கொண்டுவந்து குவிக்கப்படுகின்ற வரையில், இங்கே நெய்யப்படுகின்ற வேட்டிகளுக்கும் சேலைகளுக்கும் எந்தவிதத்திலும் ஆபத்து வரும்.

புற்றின்மீது உட்கார்ந்து கொண்டிருந்தால் ஒரு 5-நிமிடம் பாம்பு கடிக்காமலிருக்கலாம். ஏன் என்றால் அந்த நேரத்திலே பாம்பு இரை தேடுவதற்கு வேறு பக்கத்திலே போயிருக்கக்கூடும். எப்படியும் மறுபடியும் அந்தப் புற்றுக்குள்ளே பாம்பு வரும். புற்றின் மீது உட்கார்ந்திருக்கின்ற வரையில் பாம்புக்கடி என்ற ஆபத் எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது.

அதைப்போல வடநாட்டு ஆலைத் தொழில் தமிழ்நாட்டு நெசவுத் தொழிலுக்குப் போட்டியாக இருக்கிறவரையில், நெசவாளர்களுடைய அல்லல் தீராது. ஆனால் என்ன இருந்தால் தீரும்? **திராவிட நாடு என்ற எல்லைக்கோடு கிடைத்துவிட்டால் தீரும்.**

திராவிட நாடு என்ற எல்லைக் கோடு கிடைத்தால் எப்படித் தீரும்? திராவிட நாட்டுச் சர்க்கார் உட்காருவார்கள். "நம்முடைய நாட்டிலேஎத்தனை இலட்சம் கைத்தறி நெசவாளர்கள்? அவர்கள் நெய்கிற ரகங்கள் என்னென்ன? நாற்பதா? அறுபதா? எண்பதா? கரைபோட்ட வேட்டியா, கரை போட்ட சேலையா? இந்த ரகங்களைக் குறித்து, இந்த ரகங்களை மில்லிலே இங்கேயும் தயாரிக்கக் கூடாது, வெளியிலே தயாரித்தாலும்உள்ளேவரக்கூடாது" என்று

(2-ம் பக்கம் பார்க்க)